is the remedy provided for the creditor? Is he to le a suit for the instalments that are in arrears? Or, is he to file a suit for the entire remaining balance? Whatever may be the answer which the Government may give now, I may state that it will lead to multiplicity of proceedings and consequently to much expenses, in practical working. 12-50 p.m.

"Lastly, I have to point out that there are already the Insolvency Act, Usurious Loans Act, Interest Act and the famous Act IV of 1938. Thus, there are these protective measures for not only agriculturists but also for debtors in general. The Civil Courts do not nowadays allow the creditors to enforce the entire liability by way of drastic execution proceedings. Therefore, I suggest that it would be wise on the part of the Government to drop this Bill and leave the agriculturists to the immunity already given by the several Acts mentioned by me and also to the discretion of the Civil Courts functioning in our State. With these words, I appeal to the Joint Select Committee to go into the details of the several defects and to come forward with a more perfect Bill or to recommend the dropping of the Bill once for all."

* **Sri P. G. MANICKAM**:—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நமது சென்னை மாகாணத்தில் அதிகமான விவசாயிகள் இருக்கிறார்கள். சுமார் 50 ரூபாய் கந்தாயம் செலுத்தக்கூடிய விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று கவர்ன்மெண்டு அறிக்கையில் சொல்லப்படுகிறது. இந்த விவசாயிகளை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் 50 ரூபாய் கந்தாயம் கட்டக்கூடிய விவசாயி 5,000 ரூபாய் கடன் வாங்குவதாக வைத்துக்கொள்ளலாம். இந்தச் சட்டத்திலுள்ள வாசகத்தை எடுத்துக்கொள்வோம். இந்தச் சட்டத்தின் பிரகாரம் விவசாயிகள் பணம் கட்டவேண்டியவருக்கு வட்டியையும், அசலில் 8-ல் ஒரு பாகத்தையும் முதற்தடவை கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். உதாரணமாக அப்போது அந்த விவசாயி ரூ. 500 கொடுத்தாகவேண்டும். இந்தக் காலத்தில் சிறிய விவசாயிகள் அவ்வளவு பெரிய தொகைக்கு எங்கு போவார்கள்? அவர்கள் அந்தத் தொகையைக் கட்டக்கூடிய நிலைமையில் இருக்கிறார்களா என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும்.

" அடுத்தபடியாக, மீதியுள்ள தொகையை மூன்று வருஷத்திற்குள்ளாக கட்டியாகவேண்டும். அந்த ரூபாயைக் கட்டுவதற்கு அந்த ஏழை விவசாயினால் முடியுமா? கட்டும்படியான நிலையில் இருக்கிறானா என்பதுதான் கேள்வி? அனேகமாக கிராமங்களிலே ஏழை விவசாயிகள்தான் அதிகமாக இருக்கிறார்கள். 100, 150 ரூபாய்க்கு குறைவான வருமானம் வரக்கூடியவர்கள்தான் 100-க்குத் 90 பேர்கள் மேற்படி ஏழை விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தச் சட்டம் பாதுகாப்பு அளிக்கும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். உண்மையில் பார்க்கப்போனால் அவர்களின் பணத்தைக் கட்டுவதற்கும் கவர்ன்மெண்டுதான் வசதியைச் செய்துக்கொடுக்கவேண்டியதாய் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆரம்பத்திலேயே அசலில் 500 ரூபாயையும் வட்டியையும் கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. இல்லாவிட்டால் கோர்ட்டில் போட்டு தாவா செய்வதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏழை விவசாயிக்கு முதல் தடவையிலேயே ஆபத்து உண்டாகிறது. மற்ற தவணைகளில் இது முடியாத காரியம் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஆகவே கவர்ன்மெண்டு இப்போது இருக்கக்கூடிய கணக்கை எடுத்துப் பார்த்தால் இந்தியாவிலிருக்கும் விவசாயிகள் 20,000 கோடி ரூபாய்களுக்கு அதிகமாக கடன் கொடுக்கவேண்டியவர்களாய் இருக்கி

றார்கள். சென்னையில் சுமார் 200 கோடி கடன் என்று மதிப்பிடலாம். இவ்வளவையும் சென்னை கவர்ன்மெண்டு கொடுக்க முடியுமா என்றால் அதுதான் முடியாது. ஆதலால் 5,000 ரூபாய்க்கு அவர்கள் கடனில் மூழ்கிப் போகாமல் இருக்க, அவர்களுக்கு கடன் கொடுத்து ஒரு நல்ல பலனை ஏற்படுத்தலாம். அப்படியில்லாவிடில் விவசாயிகள் அதிகமாக கஷ்டத்திற்குள்ளாவார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவ்வாறு அந்த ஏழை விவசாயிகளுக்கு கவர்ன்மெண்டுதான் கொடுத்துதவ வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். கோவாபரேடிவ் சொசைடி மூலமாகவும் சமுதாய நலத் திட்டத்தின் மூலமாகவும் இவ்விதமாக கஷ்டப்படும் ஏழை விவசாயிகளுக்கு கடன் வசதி செய்து கொடுப்பதற்கு கொஞ்சம் தொகையை ஒதுக்க ஏற்பாடு செய்யலாம். இவர்களுக்கு 20 வருஷ காலத்திலேயே இந்தக் கடனை திருப்பி பெற்றுக்கொள்ளலாம். மேற்சொன்ன யோசனைகளையெல்லாம் நல்ல முறையில் கவர்ன்மெண்டு செய்தால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"ஹரிஜன விவசாயிகளைப்பற்றி சில வார்த்தைகள்சொல்ல விரும்புகிறேன். 100 ரூபாயும், 150 ரூபாயும் கந்தாயம் கட்டக்கூடிய விவசாயி ஹரிஜனங்களில் லட்சத்திற்கு ஒருவர்கூட கிடையாது. 20, 30, 50 ரூபாய்க்கு மேல் கட்டக்கூடிய கந்தாயக்காரர்கள்தான் அதிகம் இருக்கிறார்கள். பெரும்பாலான ஹரிஜன விவசாயிகளைத்தான் இச்சட்டம் பாதிக்கிறது. பத்து அல்லது 5 ரூபாய் கந்தாயம் கட்டக்கூடிய ஏழை விவசாயிகள் 2,000, 3,000, 6,000 போன்ற கடன்களை கொடுக்கமுடியாத நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் சாப்பாட்டிற்கே மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் இருக்கும் போது குறித்த காலத்தில் இக்கடன்களைக் கட்டுவதென்றால் முடியாத காரியம். அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு சாதகமாக சட்டம் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது நான் சொன்ன யோசனைகளையெல்லாம் ஏழை விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு உபயோககரமாக இருக்குமென்று நினைக்கிறேன். கோவாப்ரேடிவ் சொசைடி மூலமாக இவர்களுக்கு சௌகரியங்கள் செய்துகொடுத்தால் நல்ல முறையில் வாழ்வதற்கு ஏதுவாக இருக்கும். சுமார் 100 வருஷத்திற்கு முன்பு ஹரிஜனங்கள் எல்லோருமே நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக உழுதுண்டு வாழ்ந்திருந்தார்கள். ஆனால் இப்பொழுது பெரிய பெரிய பணக்காரர்கள், நிலச்சுவாந்தார்களின் கூலிகளாக மாறி கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வைத்திருந்த பூமிகளெல்லாம் இப்பொழுது பணக்காரர்கள் கையில் இருக்கிறது.

"கோயம்பத்தூர் ஜில்லாவிலே ஹரிஜன விவசாயிகள் 30 ஆயிரம் ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது 30, 40 ஏக்கர் நிலங்கூட கிடையாது. பல இடங்களில் இந்நிலங்கள் ஜாதி இந்துக்கள் கையிலே போய்விட்டது. இப்பொழுது இருக்கக் கூடிய நிலைமையில் அவர்கள் மாடுபோல் உழைக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். இப்படிப்பட்ட சமயத்தில் இந்தச் சட்டம் கொண்டுவருவதை நான் வரவேற்கிறேன். இந்தச் சட்டத்தை செலக்ட் கமிட்டியில் வைத்து விவசாயிகளுக்கு சர்க்காரே கடன் கொடுத்துதவுவதற்கு வசதி செய்தால், ஹரிஜனங்களின் முன்னேற்றத்தின் பெரும் பகுதியைச் செய்து முடித்தவர்களாவார்கள் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்."

1 p.m. SRI D. K. RAJU :—" Mr. Deputy Speaker, Sir, we all remember, when this Moratorium Bill was first introduced last year in this House, it was said that the measure was intended to benefit real agriculturists. I am glad that the previous speaker, Mr. Rangaswami Reddiar, dealt with the working of that Act very widely and in a most practical manner. Even though I feel

14th February 1955] [Sri D. K. Raju]

all that he said must be considered seriously by the Joint Select Committee, I would also like to say a few words on the Bill before the House.

" The Government, when they first thought of helping real agriculturists took certain steps very hastily in order to counteract the political stunts of their opponents. Otherwise, they would have thought over the matter in greater detail and would not have given room for the several loopholes and pitfalls inherent in the present Act. Nevertheless, now that a new Bill has been brought in, I hope the Joint Select Committee will not labour much on the political aspect of it but will be that only real agriculturists are benefited by it. In this connection, I would like to give one or two instances of how the present Act has been working. The Act has helped only a very few agriculturists in the real sense. It has helped in a large number those who are doing business, those who have taken large sums of money as loans for their business activities and those who lend money simply because they have some small extent of lands and hence go by the name of agriculturists. I would like the Joint Select Committee to look into the matter and to eliminate such 'agriculturists' from the scope of the Bill. Then, it must be clearly stated in the Bill that it will cover only loans taken really for agricultural purposes. Then, I would like to tell the House that the real agriculturist, however, poor he may be, does not like to take advantage of this Act and keep his loans unpaid. It is only those who have got a business aptitude that want to evade repayment of loans under the Act. Even though the Act says that it will help the agriculturists, the real agriculturist pays off his dues in time and those who are business-minded alone want to protract the period of repayment. The new Act should help only those who want help as real agriculturists and not those who pose as such, simply because they own a few acres of land. I am glad that the present Bill aims at eliminating the rich agriculturists from its scope and helping only small people. Sir, in conclusion, I once again endorse the views expressed by the previous speaker, Mr. Rangaswami Reddiar and I hope the points made by him will be fully considered by the Joint Select Committee."

* SRI L. C. PAIS :—" Sir, I support the Bill so far as the main provisions thereof are concerned. There is absolutely no doubt that the present Bill is an improvement on the existing law on the subject. There is such a thing as credit structure in society and sanctity of contractual obligations. It must be pointed out that on account of the existing law—the Moratorium Act of 1954—both the credit structure and tee sanctity attached to contractual obligations have been seriously undermined. So, it is a good sign that in the present Bill, an attempt is made to restore both these things. We are particularly happy that the Bill is going before a Joint Select Committee. In spite of the care that has been bestowed on the drafting of the Bill, there are bound to be defects here and there, a lacuna here and a lacuna there. In the interests of both the creditors and the debtors, these loopholes should be removed

[Sri L. C. Pais] [14th February 1955

and the defects rectified. I would now refer to one or two points which I hope, the Hon. the Minister in charge of the Bill would take note of. I would like to refer to the definition of the word ' agriculturist ' in the Bill. An agriculturist is defined as a person who has an interest in any agricultural or horticultural land *not being a land appurtenant to a residential building.* Now, Sir, everyone knows what has been taking place under the present Act. I know it and Mr. Baliga who comes from South Kanara knows it. There is a good deal of controversy and divergence of opinion as to the definition of ' agriculturist '. What is meant by the words ' appurtenant to a residential building '? Take the case of a person who has got a house holding within the Municipality on which he pays a tax to the Municipality. The holding consists of a building and some land adjacent to it. The extent of the adjacent land may be 20 cents or half an acre or even one acre and on which say mango trees, casuarina trees and coconut trees are grown. In some cases there are just a few trees here and there. In some cases there are more. What is the criterion to be adopted in that case to constitute that land as appurtenant or as not appurtenant. The subordinate courts have taken divergent views in this matter. To avoid unnecessary litigations, it is necessary that what is appurtenant to a building and what is not should be clearly provided for in the Act itself.

" The second point on which I seek clarification is this. Clause 4 says :

' . . . An agriculturist shall be entitled to pay within three months of the commencement of the Act the interest due on any debt due by him up to the commencement of this Act and one-eighth of the principal outstanding and the balance of the debt in three equal annual instalments on or before the 1st June of every year with the interest due on such instalment up to that date. '

Sir, here I would like to point out a specific case of hardship. There is a case of a mortgage decree wherein the preliminary and the final decrees have been passed and execution proceedings taken. The property is sold and is purchased by somebody. Just a few days before the sale is confirmed, the proceedings are stayed by the Court under the Act. What will happen to this case? I shall take another extreme case wherein the sale is confirmed and the property is awaiting delivery to the purchaser when this Bill becomes law. In such cases, is it the intention of the Government to give the debtor the right to set aside the sale by making the payments as provided in the Bill? Is it the intention of the Government to extend the benefit of the Act to cases of this kind? This is a matter which requires clarification so that we may know where we are.

1.10 p.m.

" Regarding grant of exemptions, they are now given to co-operative societies and land mortgage banks. I would like that this exemption is extended to smaller banks also. After all they are dealing with moneys received from others. They are just the institutions which supply credit to rural parts. Because of the uncertainty prevailing in the country, even genuine agriculturists are not able to get loans from these banks. It is not only the banks that would suffer. It is the debtors also that would suffer. There-

14th February 1955] [Sri L. C. Pais]

fore the point as to whether exemption should be granted to banks also from the operation of the Bill, has got to be considered. As I said they deal with other people's money and in the larger interests of the debtors themselves, apart from the interests of the banks, the question of exempting banks from the purview of this legislation should be covered.

"Then, Sir, regarding the repayment of the debt in instalments, one gets the feeling that they are far too small. Take the case of payment of arrears of rent. Most of the creditors are petty landlords. They live on these small rents. They the debtors, had already one year's respite and now according to this Bill they will pay only one-eighth and the balance in three yearly instalments. Therefore these petty landlords will have to wait for three more years to recover their dues. I ask, is this a fair thing to do? People who are depending on this limited income for their sustenance are asked to wait for three more years and recover this debt only in driblets. I am therefore rather inclined to support the view taken by some hon. Members that arrears of rent up to a certain limit should be exempted, as also smaller debts.

"I have nothing more to add except to hope that when the Joint Select Committee goes into the provisions of the Bill, the Bill would be put in proper form and that the Bill would be taken well both by the debtors and the creditors. There is absolutely no doubt that the principle underlying the Bill is intended to help the indebted agriculturists, as much as possible. At the same time we should also take into consideration the case of smaller landlords, and creditors whose position to-day is not very much better than the position of the debtors."

* Sri V. MADANAGOPAL :—" உதவி சபா நாயகர் அவர்களே, சபையின் முன்னுள்ள இந்த மசோதாவை கவனமாகப் படித்தால் 'ஒரு அடி முன்னால், இரண்டு அடி பின்னால்' என்று சொல்லக்கூடிய நிலையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது. இருந்த போதிலும் கூட நமது மாகாணத்திலுள்ள விவசாயிகள் நெடுங்காலமாகக் கேட்டு வந்த கோரிக்கைகளையும், அவர்கள் இன்று பட்டிருக்கக் கூடிய கடன் தொல்லைகளையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்த மாதிரி ஒரு மசோதாக் கொண்டு வந்திருப்பதை கடன் பட்டிருக்கக்கூடிய விவசாயிகள் நிச்சயமாக வரவேற்பார்கள். இந்த மசோதாவைப்பற்றி பேசும்பொழுது விவசாய உற்பத்திப் பொருள்களின் விலை வீழ்ச்சியையும், இன்று கடன் கொடுத்து வாங்கக்கூடிய முறையில் ஏற்பட்டுள்ள புதிய மாறுதல்களையும் சர்க்கார் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். மத்திய சர்க்காரின் விவசாய பொருள்களின் விலை பற்றிய புள்ளி விபரங்களை எடுத்துக்கொண்டால் 1953--ஐ விட 1954–ல் எண்ணை வித்துக்கள் 25 சத விகிதமும் இதர பொருள்கள் 40 சத விகிதமும் குறைந்திருக்கின்றன. யுத்தத்திற்கு பிறகும் 1955–ம் வருஷம் வரையிலும், விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களின் விலைகள் திட்ட வட்டமாகக் குறைந்து கொண்டே யிருக்கின்றன. ஆனால் விவசாயிகள் வாங்கக்கூடிய பொருள்களின் விலை குறைய வில்லை. உதாரணமாக, சென்ற வருடம் ரூ. 71 ஆக விற்று வந்த 80 lb. கொண்ட கடலை மூட்டை இன்று ரூ. 8–8–0-க்கு விற்கப்படுகிறது. 1950–ல் ரூ. 60 ஆக யிருந்த ஒரு மூட்டை எள்ளு இன்று ரூ. 30 ஆக யிருக்கிறது. அதே மாதிரிதான், பருத்தியின் விலையும் இதர பொருள்களும் குறைந்திருக்கிறது. 1950–ம் வருஷத்தில் 300 ரூபாய்க்கு

[Sri V. Madanagopal] [14th February 1955

விற்ற விவசாய பொருள் இன்று 150 ரூபாயாக குறைந்துள்ளது. ஆனால் 1950-ல் ஒரு விவசாயி 300 ரூபாய் கடன் வாங்கி யிருந்தால், இன்றைக்கு அந்தக் கடன் உயர்ந்திருக்கிறதே தவிர, குறைய வில்லை.

"அடுத்தப்படியாக 1938-ம் வருஷத்தில் கனம் ராஜகோபாலாச்சாரியார் கொண்டு வந்த விவசாயக் கடன் நிவாரணச் சட்டத்திற்கு பிறகு லேவா தேவி முறையில் ஒரு புதிய சகாப்தமே ஏற்பட்டு விட்டது. உதாரணமாக இன்றைக்கு நிலம் படைத்தவர்கள், ஆரம்பத்தில் வாரமாக யிருந்த முறையை குத்தகையாக மாற்றிவிட்டார்கள். நிலங்களை குத்தகைக்கு விடுவதற்காக அட்வான்சும் வாங்க ஆரம்பித்து விட்டார்கள். நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி ஒரு சட்டம் வரப்போகிறது என்று தெரிந்ததுமே நிலத்தை மாற்றுவது, பாகப்பிரிவினை செய்வது போன்ற காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலப்பிரபுக்கள் முன்னால், சர்க்காரிலிருக்கக்கூடிய சட்ட நிபுணர்களும், பொருளாதார நிபுணர்களும் நிற்க முடியாது. இருபது வருடங்களுக்குப் பின்னால் என்ன சட்டங்கள் வரப்போகின்றன என்பதை முன் கூட்டியே யூகித்து அதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளை இன்றைக்கே செய்து கொண்டிருக்கிறார்கள். இது சட்ட சபையிலிருக்கக் கூடிய அங்கத்தினர்களுக்கும் மந்திரிகளுக்கும் தெரியும். கிராமங்களில், ரூபாய் 100 கடன் கொடுக்கப்பட்டால், பத்திரத்தில் ரூபாய் 200 அல்லது ரூபாய் 250 என்று எழுதி வாங்கப்படுகிறது. கோர்ட்டுக்குப் போனால் 6 சத விகித வட்டிதான் தீர்ப்பாகும். ஆகையால் சட்டத்திற்கு விரோதமாக அதிக வட்டி வாங்குவதற்காக, சட்ட விரோதமான ரிகார்டுகளைத் தயாரித்து, ரூ. 100-க்கு மாதத்திற்கு ரூ. 2 அல்லது ரூ. 3 வட்டியும், அதற்கு அதிகமாகவும் வாங்குகிறார்கள். ஈட்டுப் பத்திரத்தை எடுத்துக்கொண்டால், ஒரு நிலத்தின் மீது 1,000 ரூபாய் ஈடு கொடுத்து விட்டு ரூபாய் 500-க்கு தனியாக ஒரு நோட்டு எழுதி வாங்கப்படுகிறது. இப்படி செய்வதின் மூலம் சட்ட விரோதமாக அதிக வட்டிவசூலிக்கிறார்கள். கடன் பட்ட விவசாயி கொஞ்சம் கொஞ்சமாக அசலையும் வட்டியையும் திருப்பிக் கொடுத்தால், அவைகளைப் பிராமிசரி நோட்டில் வரவு வைப்பதே கிடையாது. மேலும் இந்தக் கடன் ஒத்தி வைப்புச் சட்டம் வந்த பிறகு கிரயப்பத்திரங்கள் விஷயத்திலும், புதிய முறை ஏற்பட்டுள்ளது. ரூ. 4,000 சொத்து ரூ. 1,000-க்குக் கிரயம் செய்யப்பட்டு வாங்கப்படுகிறது. மேலும், அந்த நிலத்தை அனுபவிப்பதற்கு குத்தகைச் சீட்டு எழுதி வாங்கப்படுகிறது. இந்த மாதிரி சட்ட விரோதமான ரிக்கார்டுகள் தயார் செய்யப்படுகின்றன. இந்த மசோதாவில் சட்ட விரோதமான முறைகளைத் தடுப்பதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆகவே சர்க்கார் ஒவ்வொரு தாலூகாவிலும் விசேஷ கடன் பரிசீலனைக் கோர்ட்டுகளை ஏற்படுத்தி, உண்மையிலேயே எவ்வளவு பணம் கடனாக வாங்கப்பட்டது, அதற்கு என்ன வட்டி, சட்டப்படிச் சேர வேண்டிய கடன் தொகை எவ்வளவு என்பதையெல்லாம் பரிசீலிக்க வேண்டும். இதற்காக தனிப்பட்ட கோர்ட்டுகளை ஏற்படுத்தவோ, அல்லது ஏற்கனவே இருக்கக்கூடிய கோர்ட்டுகளிலேயே இந்த மாதிரி கடன்களை பரிசீலனை செய்வதற்கு **Select Committee** ஒரு திருத்தம் செய்து வழி வகை செய்ய வேண்டும். அப்படிச் செய்யாத வரையில், இந்த சட்டம் பயனற்றதாகப் போய்விடும். ஒரு கையால் கொடுத்ததை மற்றொரு கையால் வாங்கும் முறையில்தான் இந்த மசோதா அமைந்திருக்கிறது. ரூ. 5,000-க்கு கீழ்ப்பட்ட சொத்துள்ளவர், இந்த மசோதாவின் படி தான் கொடுத்த கடனை உடனடியாக விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யலாமென்று சொன்னால் பெரும் பாலான மக்களுக்கு அநீதியை விளைவிக்கும். இந்த மசோதா கடன் ரத்தோ அல்லது
1-20 p.m. குறைப்போ செய்ய வில்லை. தவணையாக வசூலிக்கவே வகை செய்கிறது. ஆகையால் இதில் விதிவிலக்கு தேவை யில்லை. ரூ. 5,000-க்குள் சொத்து மதிப்பு உள்ளவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்தில் சொல்லப்படுகிறது. கோர்ட்டுக்குப் போனால் ஒருவருடைய சொத்து மதிப்பை ரூபாங் 5,000-க்குள் இருக்கிறது என்று கணக்கிட முடியாது. அப்படிக் கணக்கிடுவதாக இருந்தால் அதில் எவ்வளவோ சிக்கல்கள் ஏற்படலாம். கடன் கொடுத்தவர்கள் தங்களுக்கு

14th February 1955] [Sri V. Madanagopal]

ரூ. 5,000-க்கும் குறைவாகத்தான் சொத்து இருக்கிறது என்று வாதாடுவதற்கு சௌகர்யமாக இருக்குமே தவிர அவருக்கு ரூ. 5,000-க்கு அதிகப்படியாக இருக்கிறது என்று ருஜூப்பிக்க முடியாது. அதனால் சின்ன விவசாயிகள் கடன் தவணை வசதியை அனுபவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விடும்.

"மூன்றாவது விஷயம். இந்தச் சட்டத்தின் மூலம் விவசாயி என்று கருதுவதற்கு பல பேர்கள் பல விஷயங்களைப்பற்றி பேசினார்கள். அப்படிப் பேசியவர்கள் உண்மையிலேயே விவசாயிகளுக்கு நன்மை அளிக்க வேண்டுமென்றே கூறியிருக்கிறார்கள். உண்மையாகவே யார் கஷ்டப்படுகிறார்களோ அவர்களுக்கு எந்த விதமான பரிகாரமும் இந்தச் சட்டத்தின் மூலமாக இல்லை. இப்பொழுது எவ்வளவோ நிலமில்லாத கூலியாட்கள் இருக்கின்றார்கள். பெரும்பாலும் ஹரிஜனத் தொழிலாளர்கள் கிராமங்களில் தங்களுடைய சிறு நிலங்களைக்கூட இழந்து பாபராக இருக்கிறார்கள். நாம் சட்டம் கொண்டு வரும்போது அவர்களுக்கு நல்லது செய்யும்படியாக சட்டம் கொண்டு வரவேண்டும். நிலமில்லாத விவசாய கூலி ஆட்களுக்கு ஐம்பது ரூபாய் கடன் கொடுத்து விட்டு நூறு ரூபாய்க்கு பாண்டு எழுதி வாங்கிக்கொண்டு அவனிடமிருந்து எல்லா வேலைகளையும் இலவசமாக வாங்கிக்கொண்டு வருகிறார்கள். தான் வாங்கிய கடனுக்குக் கொடுக்க வேண்டிய வட்டிக்காக அவன் வருஷம் பூராவும் அந்த மிராசுதாரருக்கு உழைக்கவேண்டும். அவனுடைய மனைவியும் குழந்தைகளும்கூட கடன் கொடுத்தவருக்கு அடிமையாக வேலை செய்ய வேண்டியுள்ளது. ஆகவே சட்டத்தில் இவர்களுக்கே முதல் நிவாரணம் கொடுக்க வேண்டும். இது ஒரு சிக்கலான விஷயமல்ல. இந்த சட்டத்தில் விவசாயக் கூலிகளையும் பண்ணையாட்களையும் அவசியமாக சேர்த்துக் கொள்ளவேண்டும். இப்பொழுது தவணை கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தவணை போதாது. குறைந்தபட்சமாக கடன் தொகையை அடிப்படையாக எடுத்துக்கொண்டு தவணை விதிக்க வேண்டும். அதாவது ரூ. 500 கடன் வாங்கியிருந்தால் ஐந்து வருஷங்களிலும், ஆயிரம் ரூபாய் முதல் பத்தாயிரம் வரை கடன் வாங்கியிருந்தால் பத்து வருஷங்களிலும், பத்தாயிரத்திற்கு மேல் கடன் வாங்கி இருந்தால் பதினைந்து வருஷங்களிலும் கடனைத் திருப்பிக் கொடுக்கும்படியாக தவணையை விதிக்க வேண்டும். இம்மாதிரியாக முதலில் எட்டில் ஒரு பங்கும் பகுதியையும் வழக்கம்போல் மூன்று வருஷங்களில் கட்டியே தீர வேண்டும் என்று சொல்லுவது விவசாயிகளுக்கு பாதகமான நிலைமை ஏற்படும். அப்படி இல்லாமல் கடனுக்குத் தக்கபடி தவணைக் கணக்கில் கட்ட வேண்டும் என்று கொண்டு வரவேண்டும். இது மிகவும் அவசியமான விஷயம். லட்சக்கணக்கான விவசாயிகள் இந்த சட்டசபையை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் முறையில் இந்தச் சட்டத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்."

* SRI M. NARAYANA KURUP :—" Mr. Deputy Speaker, Sir, the much-advertised relief for the agriculturists when it is crystallized into a Bill, has proved to be a storm in a tea cup; it has proved to be much ado about nothing. This is only a face-saving measure. As it is, even now I believe, no creditor will grudge to recieve his amount in three instalments if that is properly paid. We know also that in appropriate cases courts will not only allow three instalments but even thirty instalments. The sum and substance of the Bill is that it only allows certain classes of persons to pay their debt in three annual instalments and that is given the dignified name of 'relief to indebted agriculturists'.

" Sir, mention has been made by some of the previous speakers that an attempt has been made in this case to hold the balance even between the creditors and the debtors. I say that in a capitalistic

society, where there is concentration of wealth, any such attempt to hold the scales even between the two, will necessarily result in adversely affecting the poorer section, that is the debtor section of the society. That is amply justified by the Bill and the results it would bring in.

" Sir, we know that agricultural indebtedness is a very serious problem in the country as well as in this State. As a matter of fact, the indebtedness was greatly on the increase before the war and during the days of the war when the prices of agricultural commodities rose sharply, there was some slight fall in the indebtedness. But it has been remarked by the experts who went into the question that it has helped only the richer peasants and the higher middle class people. So far as the under-dogs of the debtors are concerned, their condition has not improved but, on the other hand, it has deteriorated. Sir, we had Act IV of 1938 which was far more comprehensive and intended to confer more substantial benefits on the debtors. Now, the important defect of this Bill, though it contains very good and salutary provisions for wiping out debts, etc., is that there is no provision to provide cheap credit for clearing the debt that the agriculturists are liable to pay. We can tackle the problem of rural indebtedness only when we can find out easy means of credit to the agriculturists either by the Government or by the co-operatives. Sir, it has been found by the expert committee that went into the question that only seven per cent of the rural credit is provided by Government and the co-operatives. Therefore, so long as the Government do not come forward with any measure to provide this kind of credit facilities for the agriculturists, all their attempts are likely to fail.

" Then, Sir, I shall offer a few observations on the clauses of the Bill, as desired by the Hon. the Minister for Revenue. The term ' person ' is not defined in this Bill. We have to refer to the Madras General Clauses Act and there the definition of the word ' person ' is very wide. It is defined that ' persons ' include any company or association of individuals, whether incorporated or not. But Act
1-39 IV of 1938 gives a more rectricted and reasonable definition. For
p.m. instance, I shall point out that if ' person ' was not defined, it will include institutions such as religious and charitable institutions which were specifically excluded in Act IV of 1938. But, if it is the intention that the benefit of this legislation should be conferred on these institutions also, I have nothing to say.

" I then come to the point that any person liable to pay land revenue exceeding one hundred and fifty rupees per annum will not be included as an agriculturist. Now, there may be a person in possession of vast extents of properties mortgaged or otherwise assessed to land revenue at Rs. 200 or even Rs. 500 but he may not be liable to pay the land revenue. Similarly there may be a poor landowner who is liable to pay a land revenue of Rs. 150 but whose income may not be even as much as the land revenue itself. Thus, there may be persons in possession of vast extents of land yielding

14th February 1955] [Sri M. Narayana Kurup]

thousands of rupees but not burdened with the liability to pay the assessments which may be far more than Rs. 150. Still they will not come under the exception and they will get the benefit."

DEPUTY SPEAKER :—" The hon. Member can continue his speech after lunch. The House will now adjourn for lunch and meet again at 2-30 p.m."

The House then rose for lunch.

(After lunch—2-30 p.m.)

SRI S. PANCHAKSHARAM :—" There is no quorum, Sir. We are waiting for some more Members to come in, Sir."

(At this stage some more hon. Members came into the Chamber.)

MR. SPEAKER :—" There is quorum now. The hon. Member Sri Kurup may continue his speech."

* SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, Sir, coming to the definition of 'debt', I have to point out one difference from that which is contained in the 1938 Act. The 1938 Act excluded rent from the definition of 'debt'. Of course, I am not saying that it should be included or excluded now. We have a Ryots' Protection Act in all parts of the State, except probably Malabar and South Kanara and it provides certain modes of deposit of rent and in order that a tenant may get the benefit of that Act, I do not know which Act will have precedence, because rent also is now included in the definition of 'debt'.

(Deputy Speaker in the Chair.)

" Then, Sir, coming to exception (vi), it says that nothing in this Act will affect a creditor who is possessed of property worth less than Rs. 5,000. Sir, the point was elaborately considered in the 1938 Act and then it was originally fixed that the exception should apply only to women and that too who did not possess property worth more than Rs. 3,000. That was, of course, during pre-Independence days. When we came to 1948, that sub-section was amended and if I am correct, the 3,000 was altered to 6,000. Still, the exception was confined to women. But now in 1955, after the Socialistic Pattern, the original idea has changed and it has been made applicable to all creditors whether they are men or women and the value of the property is fixed at Rs. 5,000.

" Sir, initially, there are great difficulties in fixing the worth of the property owned by an individual. The Bill does not say on whom the burden of proof lies. It will be open to a creditor not to show or to screen all his outstandings and say, 'I am worth less than Rs. 5,000.' It will be almost impossible for the debtor to prove that the creditor is worth more than Rs. 5,000. That is really a great snap which practically negatives the benefit which

is intended to be conferred by this legislation. That is why even at the outset I said that the attempt to hold the scales even between the two will defeat the very purpose of this Act.

" Then, Sir, with regard to clause 7, it says that any alienation of property within the three years prescribed will be voidable. The first part of it is an exception to the ordinary law, because, generally, a man has to allege and prove a transaction is voidable. Now, that clause throws the burden on the defendant that draws the presumption that the transaction is *prima facie* voidable. Now, there may be cases where a man had no debts at all in 1953 and another individual in all *bona fides* purchased the property from
2-40 p.m. him, who really had no debt then. In order to defeat this purchaser, the vendor in collusion with another man may create a document that is prior to 1st October 1953 and then he may say that the whole transaction is void. There is such a danger involved in it. Of course, there is another sub-clause in which case the presumption is the other way about. The first deals with voluntary transfer and the sub-clause (ii) deals with involuntary transfer. It is open, as I said, for one to create bogus documents in favour of his own person; then, he can suffer a decree to be passed against himself and property sold. In such a case, the provision dealing with voluntary sales will not apply. With regard to burden of proof, there is inconsistency or divergence between sub-clause (1) and sub-cause (2), and it is open to the so-called debtor to get the benefit of sub-clause (2) by suffering a decree against him and getting the property sold.

" These are the things which I wanted to say. After all there is nothing revolutionary in this Bill. The very small help that is sought to be given by one hand is taken away by the other by the exceptions provided in the Bill. The exception clauses will only add to litigation and to the difficulties of the people."

* **Sri R. S. ARUMUGAM** :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தற்பொழுது விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் சபையின் விவாதத்தில் இருக்கிறது. முன்பு தற்காலிகமாக ஒரு வருஷத்திற்கு மாத்திரம் நிவாரணம் அளித்திருந்தார்கள். இப்பொழுது அதை ஓரளவு விரிவாக்கும் நோக்கத்தில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், இது க்ஷேமநல சர்க்காராதலால் திடீரென்று ஒரு காரியத்தைச் செய்துவிடக் கூடாதென்ற நோக்கத்தோடேயே இதை நன்கு மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று எண்ணி பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப தீர்மானித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெருந்தன்மையை யாரும் பாரராட்டாமல் இருக்க முடியாது. இந்த மசோதாவைப் பரிசீலனை செய்வதற்காக அமைக்கப்படப்போகும் பொறுக்குக் கமிட்டியானது இதில் இன்னும் இருக்கிற ஒரு சில குறைகளையும் அறவே நீக்கி இந்தச் சட்டத்தில் எவ்வித குறைபாடும் இல்லாமல் செய்துவிடும் என்ற நம்பிக்கையில் இருக்கிறேன்.

" இருந்தபோதிலும் கூட எனக்குத் தோன்றுகிற சில யோசனைகளையும் சொன்னால் அது சர்க்காருக்கும், பொறுக்குக் கமிட்டிக்கும் உதவிகரமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

" விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கப்படுமென்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக விவசாயக்கூலிகளும், விவசாயப் பண்ணையாட்களும் கடன் வாங்கியிருந்தால் இந்தச் சட்டத்தினால் அவர்களுக்கு உதவி ஏற்படுமா, அவர்கள் விஷயத்திலும் இந்தச் சட்டம் செல்லுமா,

செல்லாதா என்பது தெரியவில்லை. அது இந்தச் சட்டத்தில் தெளிவு படுத்தப்படவில்லையென்றே நினைக்கிறேன். ஆகவே பொறுக்குக் கமிட்டியார் இதனை நன்கு பரிசீலனை செய்து விவசாயப் பண்ணையாட்கள், விவசாயக் கூலிகள் ஆகியோரின் விஷயத்தில் இந்தச் சட்டம் செல்லாது என்றால் செல்லும் தன்மையில் சட்டத்தைத் திருத்துவதற்கு வேண்டியவைகளைச் செய்ய வேண்டுமென்று இந்த இடத்தில் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

“அடுத்தபடியாக பல இடங்களில் சிட் பண்டுகள் நடக்கின்றன. சிலர் சேர்ந்து இவற்றை நடத்துகிறார்கள். பல புள்ளிகள் சீட்டுப் போடுகிறார்கள். ஆனால் சில பேர்கள் முதலிலேயே தங்கள் சீட்டை எடுத்துவிட்டுப் பின்னர் பணம் கட்டாமல் இருந்துவிடுகிறார்கள். சிட் பண்டு கம்பெனிகள் கோர்ட்டுக்குச் சென்றாலும் தாங்கள் விவசாயிகள் என்று சொல் தங்களைச் சட்டம் ஒன்றும் செய்யாத முறையில் தப்பித்துக்கொள்கிறார்கள். இதனால் பாதிக்கப்படுகின்றது சிட் பண்டு கம்பெனிகள் மாத்திரமல்ல, இவற்றிலே சேர்ந்திருக்கிற பலபேர்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். சீட்டு நடக்காமல் போகிறபோது பல பேர்கள் நஷ்டம் அடைகிறார்கள். இப்படிப் பார்த்தால் இன்றையதினம் திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்த சில சிட் பண்டு கம்பெனிகள், சீட்டு எடுத்தவர்கள், தாங்கள் விவசாயி என்ற காரணத்தைக் காட்டி பணம் கட்டாமல் போட்டுவிட்டதன் காரணமாக நிறுத்தப்பட்டுவிட்டதாக அறிகிறேன். சிட் பண்டு கம்பெனிகள் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். பல மக்களுடைய நலனுக்காகவும் அவை இயங்கி வருகின்றன. ஆகவே இந்தக் கடன் வாய்தாச் சட்டத்திலிருந்து அந்தக் கம்பெனிகளுக்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லாவிட்டால் கம்பெனிகள் நஷ்டப்படுவதோடுகூட அதில் அங்கத்தினராகச் சேர்ந்துள்ள பல புள்ளிகளும் நஷ்டம் அடையும்படி நேரிடும். பொறுக்குக் கமிட்டியார் இவ்விஷயத்தை நன்கு பரிசீலனை செய்து சீட்டு எடுத்தவர்கள் தொடர்ந்து பணம் கட்டி வரும்படி அவர்கள் விவசாயிகளாக இருந்தாலும்கூட இந்தச் சட்டத்தினால் பணம் கட்டாமல் தப்பித்துக்கொள்ளாதவாறு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

“மேலும் இந்தச் சட்டம் விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது. விவசாயிகளாக இல்லாத பரம ஏழைகள் பலர் இருக்கிறார்கள். அவர்களும் தாங்கமாட்டாத கடன் சுமையினால் மிக அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் நாம் ஏதாவது செய்தாகவேண்டும். கிராமப்புறங்களில் நூற்றுக்கு பன்னிரண்டு ரூபாய் மாத்திரம் வட்டி வாங்கவில்லை. பலவிதமான வட்டி முறைகள் இருக்கின்றன. சிட்டை வட்டி என்று ஒன்று இருக்கிறது. அதாவது ஒரு ரூபாய்க்கு ஒரு ரூபாய் வட்டி வாங்கும் முறை. பத்து ரூபாய் கடன் கொடுத்துவிட்டு மாதம் இரண்டு ரூபாயாக பத்துமாதம் வட்டியும் முதலுமாகப் பணம் வசூலிக்கப்படுகிறது. இந்த மாதிரியாக ஒரு பக்கத்தில் அநியாயமான வட்டிகள் வசூலிக்கப்படுகின்றன. அதைத்தவிர நெல் வட்டி வேறு இருக்கிறது. 50 ரூபாய்க்கு 6 மாதத்துக்கு ஒரு கோட்டை நெல் வட்டி. முப்பது ரூபாய் கிரயம் வைத்தாலும் 100-க்கு வருஷத்துக்கு 120 ரூபாய் வட்டி. மாத்திரம் ஆகிறது. இன்னும் பலதரப்பட்ட வட்டிகளெல்லாம் இருக்கின்றன. இந்த அநியாய வட்டிகள் எல்லாம் பெரும்பாலும் ஏழைகளிடத்தில் குறிப்பாக ஹரிஜனங்களிடத்தில் பணம் கொடுத்து வசூலிக்கிறார்கள். அவர்களிடத்திலிருந்து கொடுத்த பணத்திற்கு நோட்டு பத்திரம் வாங்கிக் கொள்வது கிடையாது. பணம் கொடுக்காவிட்டால் அந்த ஹரிஜன மக்களை அடிப்பது, மிதிப்பது, உதைப்பது எல்லாம் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் கோர்ட்டில் கேஸ் போடலாமென்றால் வாங்கிய கடனைக் கொடுக்கவே பொருளாதார வசதி கொஞ்சமும் இல்லாமல் இருக்கும்போது எப்படி முடியும். அந்த ஏழைகள் எல்லாம் இன்றைய தினம் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பொறுக்குக்கமிட்டியில் அந்த ஏழைகளுக்கும் இந்தச் சட்டத்தின் கீழ் நிவாரண எப்படி

அளிப்பது என்கின்ற விஷயம் பரிசீலனை செய்யப்படவேண்டும். இந்தச் சட்டத்தின் மூலமாகவே அவர்களுக்கு நிவாரணம் அளிக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டால் அது ரொம்பவும் நல்லதாக இருக்கும். ஆகவே அதையும் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு சிட் பண்டுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென்று மறுமுறையும் தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.''

2–46 p.m. *SRI N. RATHINA GOUNDER :—'' மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, தொடர்ந்தாற்போல் சில ஆண்டுகளாகப் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டதன் காரணமாக ஏழை விவசாயிகள் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள் என்றே தாற்காலிகமாக ஓராண்டு கடன் நிவாரணச் சட்டத்தை, சர்க்கார் முன்பு கொண்டுவந்தார்கள். அதைப்பற்றி நான் மிக மிக மகிழ்ச்சி அடைந்தேன். நான் மாத்திரமல்ல, ஏழை எளிய விவசாயிகள் எல்லாம் அதனை மகிழ்ச்சியோடு பாராட்டினார்கள். ஆனால் ஒரு சிலர் மாத்திரம் இப்படி கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவந்தது மிகவும் தவறானது என்று சொல்லிக்கொண்டே வருவதானது வெறும் கூற்றே ஒழிய அதில் சிறிதளவுகூட நியாயம் இல்லையென்பதை நான் கனம் மந்திரி அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். விவசாயிகளுக்கு ஒரு ஆண்டு கடன் ஒத்திவைப்பு மசோதா வந்ததே மிக வரப்பிரசாதமாக இருந்தது. விவசாயிகளும் அந்த ஒரு ஆண்டுக்குள்ளேயே தாங்கள் வாங்கியுள்ள கடன்களை திருப்பிக்கொடுத்து விடலாமென்று மிக ஆவலோடு இருந்தார்கள். இருந்தபோதிலும் கூட தென் பிராந்தியங்களில் குறிப்பாக திருச்சிராப்பள்ளி ஜில்லா போன்ற இடங்களில் நல்ல மழை இல்லாததின் காரணமாக விவசாயிகள் மறுபடியும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனை நன்கு உணர்ந்து கனம் மந்திரி அவர்களும் திரும்ப இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்ற எங்கள் கோரிக்கைக்கு செவிசாய்த்தது பற்றி நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

'' இருந்தபோதிலும்கூட இதில் குறிப்பிட்டிருக்கிற சில ஷரத்துக்கள் போதுமான அளவு விவசாயிகளுக்கு அனுகூலம் அளிக்கக் கூடியதாக இல்லையென்று கருதுகிறேன். குறிப்பாக மூன்று ஆண்டுகளுக்குள் மூன்று தவணைக்குள் கடனைத் திருப்பித்தரவேண்டுமென்றிருப்பது அவ்வளவு சரியல்ல. இந்தக் காலத்தவணை விவசாயிகளுக்குப் போதவே போதாது. ஆகவே குறைந்தது ஐந்து ஆண்டுகளில் ஐந்து தவணைகளிலாவது கொடுக்கவேண்டுமென்று திருத்தம் செய்வது அவசியம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'' அதோடு ரூ. 150-க்கு மேல் கிஸ்தி கட்டுகிறவர்களுக்கு இந்தச் சட்டம் பாதுகாப்பாக இருக்காது என்று சொல்லியிருப்பது அவ்வளவு பொருத்தமாகாது. காரணம் தஞ்சாவூர் போன்ற நீராரம்பப் பிரதேசங்களில் ரூ. 150-க்கு மேல் கிஸ்தி கட்டுகிறவர்களின் நிலைமை ரொம்பவும் உயர்ந்ததாக இருக்கலாம். ஆனால் புஞ்சைப் பயிர் செய்யக்கூடிய மானாவாரிப் பிரதேசங்களில் 50 ரூபாய் கிஸ்தி கட்டுகிறவர்களின் நிலைமையும், 100 ரூபாய் கிஸ்தி கட்டுகிறவர்களின் நிலைமையும், 500 ரூபாய் கிஸ்தி கட்டுகிறவர்களின் நிலைமையும் ஒன்றுதான். ஏனென்றால் மழை பெய்தால் தான் அவர்களுக்கு சாகுபடி வேலை நடக்கும். இல்லாவிட்டால் ஒரேயடியாக எல்லோரும் பஞ்சத்தில் அவதிப்படவேண்டியதுதான். ஆகவேதான் குறைந்தது 250 ரூபாய்க்கு மேல் கிஸ்தி கட்டுகிறவர்களுக்கு இந்தச் சட்டம் பாதுகாப்பாக இருக்காது என்று சொல்வது நியாயமாகும். ஆகவே ரூ. 150-க்கு மேல் என்பதை ரூ. 250-க்கு மேல் என்று திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

'' ஏனென்றால் பெரிய பெரிய விவசாயிகள் கூட விவசாயத்திற்கு மாடுகள் வாங்க முடியாமலும், எருப்போட ஆடுகள் வாங்க முடியாமலும் தவிக்கிறார்கள். உள்ளபடியே அவர்கள் படுகின்ற கஷ்டத்தை எடுத்துச் சொல்லமுடியாது. ஒவ்வொரு அங்கத்தினர்களும், கனம் மந்திரிகளும் கூட அவரவர்களுடைய தொகுதி பூராவும் சுற்றிப் பார்த்தால் இந்த

14th February 1955] [Sri N. Rathina Gounder]

உண்மை நன்கு தெரியும். அப்பொழுதே மக்களுடைய உண்மைப் பிரதிநிதிகளாக நாம் அவர்கள் படுகின்ற கஷ்டங்களை எல்லாம் எடுத்துச் சபையில் சொல்லமுடியும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள் கிறேன். அதைவிட்டு இந்தச் சட்டம் வேண்டுமா, வேண்டாமா என் பதற்கு அவரவர்கள் அவரவர்களுடைய கருத்தை வெளியிடுவது அவ்வளவு பொருத்தமாகாது. இங்கு நான் ஒரு விஷயத்தை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். வட்டிக்குப் பணம் கொடுப் பவர்களுடைய எண்ணமும், வழக்கறிஞர்களுடைய எண்ணமும், இன்னும் மற்ற வியாபாரிகளுடைய எண்ணமும் சிறிது முரண்பட்டதாக இருப்பது பற்றி மிக வருந்துகிறேன். அவர்களைப்பற்றி நான் தப்பாகச் சொல்ல வில்லை. அப்படியிருந்தாலும் அவர்கள் பொருட்படுத்தமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் அவரவர்களுடைய பிழைப்பைப் பாதிக்கிறது என்ற முறையிலே அவர்களுடைய எண்ணப்பிரகாரம் சொல்லிக் கொள்கிறார்கள். காடாரம்பப் பிரதேசத்திலிருந்து வருகின்றவன் என்ற முறையில் நான் விவசாயிகளுடைய உண்மையான எண்ணம் எது என்பதை அறிந்திருக்கிறேன். அதாவது, கண்டிப்பாக இந்த நிலை யில் விவசாயிகளுக்கு ஆதரவு கொடுக்காவிட்டால் அவர்கள் பாழடைந்து விடுவார்கள். ஆகையால் ஐந்து ஆண்டுகளுக்கு இந்த கடன் வாய்தாச் சட்டத்தை விஸ்தரித்து கடனை ஐந்து வருஷத் தவணையில் பிரித்துக் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். 2–50 p.m.

"நில அடமான பாங்குகள் எல்லா இடங்களிலும் நன்றாக வேலை செய்து வருகின்றன என்று சொல்ல முடியாது. காரணமென்னவென் றால், ஒரு முறை நில அடமான பாங்கில் அப்ளிகேஷன் போட்டால் கடன் சாங்ஷன் செய்யப்படுவதற்கு ஆறு மாதமாவது ஆகிறது. விண் ணப்பத்தைப் பரிசீலனை செய்து, அதற்குவேண்டிய ரிகார்டுகளைத் தயா ரிப்பதற்குள் 'ஏன் இந்த அப்ளிகேஷன் போட்டோம்' என்ற நிலை மைக்கு விவசாயிகள் வந்துவிடுகிறார்கள். ஆகவே, கூட்டுறவு இலாகாவில் ஸ்பெஷல் அதிகாரிகளை நியமித்து ஆங்காங்கே கஷ்டப்படும் விவசாயிகளுக் குக் கண்டிப்பாக ஆதரவு அளிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"பூமியையாவது விற்று கடனை அடைத்துவிடவேண்டுமென்று விவ சாயி நினைத்தாலும் பூமியின் விலை மூன்றிலொரு பங்குக்குத்தான் போகி றது. பூமியின் விலையில் மூன்றிலொரு பங்குக்குத்தான் பூமியை வாங்கு கிறவர்கள் பணம் கொடுக்க முன்வருகிறார்கள். ஆகவே, பூமியை விற் றாலும் கடனைத் திருப்பிக்கொடுப்பதற்குப் போதுமானதாக இருப்பதில்லை. ரூ. 25 முதல் ரூ. 30 வரையில் தானியங்களுக்கு விலை இருந்துவந்தது. இப்பொழுது ரூ. 11 அல்லது ரூ. 12-க்கு எங்கள் பிரதேசத்தில் இறங்கி யிருக்கிறது. எத்தனை மூட்டை தானியம் விற்றாலும் அந்தப் பணம் வட்டிக்குக்கூட காணாது என்ற நிலையில் விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறார்கள். ஆகையால் இந்த மசோதா கண்டிப்பாகத் தேவையாக இருக்கிறதென்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

"எங்கள் பிரதேசங்களில் ஆயிரம் ரூபாய் ஒருவர் கடன் வாங்க வேண்டுமென்று நினைத்தால், மதிப்பிற்குரிய நண்பர் உயர்திரு மதன கோபால் அவர்கள் சொன்னதுபோல, ரூ. 2000-க்கு பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டிய மோசமான நிலைமை நிலவி வருகிறது. விவசாயி களுக்குப் பணம் தேவைப்படும் நெருக்கடியான சமயத்தில் உயிரை விடுவதைக் காட்டிலும் பாண்டு எழுதிக்கொடுத்து ஒரு சிறிய தொகை யைப் பெற்று குடும்பத்தைக் காப்பாற்றலாம் என்று கடன் வாங்கிவிடு கிறார்கள். இப்படி அநீதியான முறையில் அதிகப் பணத்திற்கு கை யெழுத்துப்போட்டு பத்திரம் எழுதிக் கொடுக்கும்படி கேட்கும் முறையை சர்க்கார் கண்காணிக்கவேண்டும். சர்க்காரின் ஸி.ஐ.டி. இலாகாவின் மூலமாகவாவது இப்படிப்பட்ட முறை இருப்பதைக் கண்டுபிடித்து, ஜன விரோதமாகவும் நாட்டின் முன்னேற்றத்திற்கு கெடுதல் விளைவிக்கக்கூடிய முறையிலும் நடந்துகொள்ளும் கடன்காரர்களின் மீது கண்டிப்பான முறை

யில் நடவடிக்கை எடுக்கும்படியான ஏற்பாட்டைச் சர்க்கார் செய்தால் விவசாயிகளுக்கு மிகவும் நன்மையாக இருக்குமென்று மந்திரி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

" மூன்று வருஷங்களுக்குள் கடனைத் திருப்பிக்கொடுக்கவேண்டுமென்று இந்த மசோதாவில் கண்டிருப்பதற்குப் பதிலாக ஐந்து வருஷ தவணைகளில் கடனைத் திருப்பிக்கொடுக்க அனுமதிக்குமாறு இம்மசோதாவைத் திருத்தியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்த இம் மசோதாவை நான் பாராட்டி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்."

* SRI S. PANCHAKSHARAM :—" Mr. Deputy Speaker, Sir, I welcome this measure and congratulate the Hon. the Revenue Minister on having arrived at a happy compromise between two extreme view-points and on having brought in this measure for the approved of this House. When the Ordinance regarding moratorium was promulgated and when Act V of 1954 was enacted, the uppermost intention was no doubt to give relief to indebted agriculturists. But it seems to me and several others also feel that the objects with which these two measures were brought into force have not been fulfilled. It will be no exaggeration if I say that those two measures have worked havoc in the field of rural credit and that all sources of credit usually avilable to indebted agricuturists or agriculturists in need of help for carrying on seasonal agricultural operations have gone dry. There is none who is willing to come forward to render any help to an agriculturist. So, the agriculturists have to be at the mercy of professional money-lenders. What sort of people professional money-lenders are I need not say. All available movable properties are to-day pawned in the hands of the professional money-lenders. That is the way in which the Ordinance and the Act of 1954 have helped the agriculturist. In fact, during the last year, so far as my district was concerned, the agriculturists were not in a position to get even small loans from their neighbouring agriculturists for carrying on seasonal operations, and the effect of it is definitely felt in the outturn this year. When I say that there is a happy compromise arrived at by the Hon. the Revenue Minister to help the indebted agriculturists to repay their debts in instalments at the same time preventing useless or harassing litigation against agriculturists, it is a happy compromise between these two things. Therefore, I welcome this measure.

" There is also another feature for which I have got a word of praise. I may say with a certain amount of pride that as a piece of well-drafted legislation, this Bill is in strange contrast to other previous pieces of legislation. I have read it once, twice and half a dozen times and so far as I am able to see, there can be no criticism against the way in which the Bill has been drafted. I am not able to find any legal flaws therein. For the first time, I am able to see a foolproof Bill. (Interruption.) There may, of course, be ideological differences. If the other side wants that the entire credit system must be reorganized by wiping out all debts, I am not going to subscribe to that view at present, at any rate. If there

14th February 1955] [Sri S. Panchaksharam]

are certain ideological differences, I cannot help it. There may be certain legal defects which have got to be rectified. I hope they will be rectified at the Select Committee stage.

" There is another thing that I want to remind the Government about. Let not the Government now feel that having enacted a piece of legislation of this type and having postponed the collection of agricultural debts for some time, the duty cast upon them is discharged. There is a paramount duty cast upon them to find out an alternative method for provision of credit facilities for agriculturists. At any rate, during the next Five-Year Plan period, some alternative method should be found out by which the agriculturists need not be made to depend upon money-lenders for credit. The alternative method will be to revive the activities of co-operative societies and to place them on a better footing. Most of the hon. Members here might have read the summary produced by the Reserve Bank of India after a detailed survey of rural agricultural indebtedness. It has been stated therein that so far, after 50 years of co-operative activities in this State, the agriculturists in the villages have been benefited only to the extent of 3 per cent of the money they require. There are agriculturists who have helped their neighbours by lending their surplus moneys. But the most interesting feature that I have been able to find in that report is that these people have been depending upon the professional money-lenders to the tune of 44 per cent, and that figure is staggering. We can understand to what extent these people are indebted. They have to pay not only once or twice. They have to pay three times the principal. That is the position. If these agriculturists are to be at the mercy of the professional money-lenders to the tune of 45 per cent, it is a sad picture to contemplate. The Government must consider this aspect also very carefully. The Government must evolve a suitable alternative machinery by which they can immediately go to the help of the indebted agriculturists. We must see that at least in the second Five-Year Plan, the co-operatives are strengthened. We must see that the co-operative societies are properly recognized. The co-operative societies must receive adequate grants not only from the State Government but also from the Central Government so that they may be in a position to effectively help the poor agriculturists. It is very necessary that we should buttress the financial resources of the rural co-operative societies in this manner so that they may advance money to the agriculturists on easy terms. After all, during the season time, the agriculturists may need Rs. 50 or Rs. 100. This amount supplemented by their labour will go a long way in producing a decent crop. To this extent, if some money was advanced to them, the condition of the indebted agriculturists would greatly improve.

3 p.m.

" There is another feature to which I would like to make a reference. The Act is no doubt well-conceived. We want to protect the agriculturists from the harassment of the creditors. But more in sorrow than in anger I would like to ask, ' why should the Government place themselves in a superior position as compared with the private creditor? ' under this Act, the Government dues are

not postponed. Even last year I referred to this matter, but the Government did not respond. (Sri S. Swayamprakasam : 'Hear, hear.') I am not speaking for getting the applause of anybody. I am just explaining the present position. To-day, prices have been falling. Yesterday, when I suggested the prevention of the import of rice from Andhra State, there comes the reply that we are powerless. Are we really so powerless? Here in our State prices have been coming down. In my district the price of a bag which was previously Rs. 20 has come down to Rs. 10 and even Rs. 9. Our Government have been really generous in the past four or five years. In the interests of increased production and with a view to raising more and more crops, large sums of money were made to flow into the hands of the agriculturists through various channels. There were the pump-sets loan, wells loan, manure loan and other loans. All these have to be repaid by the agriculturists in instalments. The same rules that apply to private creditors must apply to the Government also. Why should the Government be placed in a different position from the private creditors? Why should they claim a superior position? After all, according to the fundamental right guaranteed under the Constitution, all must have equal protection before law. That being so, there is no point in the Government claiming a superior position. If a survey of the debt position of the agriculturists is conducted, I am sure it will reveal that the Government have advanced more money to the agriculturists than perhaps the private individuals. Under these circumstances, it is necessary for the Government to think many times before enforcing the collection of their dues. It is better if they postpone the collection of their dues at least by two years. Or, they must increase the number of instalments.

"Sir, there is no reason why the co-operative societies should be placed in a better position than the private creditors. They do not deserve this better treatment. They should postpone the collection of their dues by at least one year. When we have allowed three years in the case of private creditors, it is not too much to ask for one year in the case of co-operative societies and two years in the case of the Government. If this is done, there will be an all-round happy feeling that neither the Government nor the co-operative societies have stolen a march over the private creditors and that there have been equal protection for all before law.

" அடுத்தபடியாக மூன்று வருஷத்தில் மூன்று தவணைகளாக வாங்கியுள்ள கடன்களைத் திருப்பித்தரவேண்டுமென்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் கொடுக்கப்பட்டுள்ள தவணை காலம் போதவே போதாது. ஆகவே மூன்று வருஷத்திற்குள் என்று சொல்லப்பட்டிருப்பதை ஐந்து வருஷத்திற்குள் என்றோ அல்லது பத்து வருஷத்திற்குள் என்றோ திருப்பித் தரவேண்டுமென்றும், எல்லாக் கடன்களையும் என்பதை விட நியாயமான கடன்களை மாத்திரம் திருப்பித்தரவேண்டுமென்றும் இந்த மசோதாவில் திருத்தம் செய்யப்படவேண்டுமென்று சொல்லிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

* DR. K. B. MENON :—" Mr. Deputy Speaker, I am not inclined to congratulate the Government on the Bill that has been introduced even though there are certain changes therein which are an improvement upon the Act that is in force. The three important changes in the Bill as I see are payment in instalments, limitation of the amount and modification of the definition of ' agriculturist ' in such a way to prevent non-agriculturists from taking advantage of the provisions of the Bill. Even in regard to these three improvements, I have my own doubts. With regard to payment in instalments, I do not know whether it is a real improvement for the simple reason that any Court would allow payment in instalments and the limitation of the number of instalments to three may perhaps offer an inducement to the Court to restrict the number of instalments to three. Relatively speaking, that is an improvement upon the old provision. With regard to the limitation of the amount, there are differences of opinion as have been expressed on the floor of the Assembly and I agree with them. With regard to the question of non-agriculturists taking advantage of the provisions of the Bill, I am afraid that that can be seen only when the Act comes into operation because the debtors are shrewd people who will always be on the watch to take advantage of any Act that the Government introduce. But that, of course, is not the fault of the Government. That is something which cannot be avoided. My real charge against the Government is that these kinds of Debt Relief Acts are no solution to the problem on hand. Debt Relief Acts are double-edged weapons which sometimes work to the disadvantage of the debtor and which sometimes the people take advantage of. I also feel that Debt Relief Acts are a negative approach to the problem of credit. It is a standing grievance that opportunities for the relief of the debtor are very inadequate and unsatisfactory. Government are giving this relief through two credit institutions, namely, the Co-operative department and the Reserve Bank. The Gorwala report which has been published in a standing confession of the failure of those efforts and shows to what limited extent the co-operative institutions and the Reserve Bank have been able to offer credit facilities. These institutions have been able to offer credit facilities only to the extent of three per cent.

4–20 p.m.

The Reserve Bank has been able to offer credit facilities to the extent of four per cent only. Thus, the credit facilities offered by these institutions are to the extent of only seven per cent. The remaining 93 per cent of the credit service is rendered by the private money-lenders. This is a serious situation indeed and the Government must carefully examine these two reports, namely, the Gorwala report and the report of the Reserve Bank. Both of them clearly go to show the present unsatisfactory position. I feel that we cannot solve the problem by these negative approaches and by passing such Debt Relief Acts. There is something seriously wrong. The Government are not able to meet the real needs of the people. They do not probably understand the psychology of the debtors. They have also not carefully considered the ways and means that are adopted by the private money-lenders. Unless and until they (the Government) are able to study the situation carefully and introduce certain changes in the credit system, I am afraid that the problem will remain unsolved and as long as that problem remains unsolved, agriculture can never make any progress in this country.''

*Sri C. KANDASAMY :—“ கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கடன் சம்பந்தமான இந்தச் சட்டத்தைப்பற்றி நான் பேசும் போது கடன் பிரச்னைக்கும் தேசத்தின் நன்மைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறதென்பதை கணக்கெடுத்துக்கொண்டு இந்த மசோதா கொண்டு வரப்பட்டதாக நான் நினைக்கவில்லை. சற்று முன்பு பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ வி. பாலகிருஷ்ணன் அவர்கள் “ இந்த மசோதாவினால் நன்மையும இருக்கிறது தீமையும் இருக்கிறது, இரண்டும் கலந்திருக்கிறது ” என்று சொன்னார். பாதிக்கிணறு தாண்டக்கூடிய முறையில் இந்த மசோதா இருக்கிறதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஏனென்றால், கடன் பட்டவருக்கும், கடன் வாங்கினவருக்கும் உள்ள ஒரு பிரச்னைதானே இது என்ற வகையில் சர்க்கார் இந்தப் பிரச்னையைக் பார்க்கக் கூடாது. கடன் பிரச்னையானது தேசத்தின் நலனையே பாதிக்கக் கூடிய ஒரு முக்கியமான பிரச்னை என்பதை நாம் மனதில் கொண்டு இந்தப் பிரச்னைக்கு ஒரு பரிகாரம் காணவேண்டும்.

“ கடன் கொடுத்தவர்கள் கூட தாங்கள் ஏதோ பணம் சம்பாதித்துவிட்டோம், அது தங்கள் கையில் இருக்கிறது என்று நினைத்து வட்டிக்குக் கொடுத்து தங்கள் பணத்தை மேலும் மேலும் பெருக்கிக் கொள்ளுகிறார்கள். தங்களுடைய நன்மைக்காக மட்டும் பணம் வைத்திருக்கிறோம் என்று பார்த்தால் அதற்கு பரிகாரமே கிடையாது. நம் நாடு ஒட்டு மொத்தமாக முன்னேற வேண்டும். விவசாயிகள் நல்வாழ்வு வாழ வேண்டும், மக்களின் பண்பாடு உயரவேண்டும், தொழில் வளரவேண்டும் என்றெல்லாம் எல்லா கட்சியினரும் மதத்தினரும் பேசுகிறார்கள். அப்படிப் பார்க்கும்போது இந்தப் பிரச்னை பிரதானமாகத் தீர்க்கப்படவேண்டிய ஒரு பிரச்னையாகும். இந்தப் பிரச்னையை எப்படித் தீர்ப்பது, இந்த நாட்டிலுள்ள எல்லா தரப்பினருக்கும் எப்படி நன்மை ஏற்பட முடியும் என்ற வகையில் சிந்தனை செய்து காரியங்கள் நடத்தினால், இதற்குப் பரிகாரம் காணமுடியுமே தவிர கடன் கொடுத்தவர்களுடைய கண்ணோட்டத்துடனோ, கடன் வாங்கியவர்களுடைய கண்ணோட்டத்துடனோ அல்லது வக்கீல்கள் கண்ணோட்டத்துடனோ இந்தப் பிரச்னையை அணுகினால் உண்மையான நோக்கத்தைப் பூர்த்தி செய்ததாகாது.

“ இன்றைய தினம் நாட்டை ஆளும் கட்சியாகிய காங்கிரஸ் கட்சி சென்ற காலத்தில் பொதுமக்களுக்குச் சொன்ன விஷயங்களை யெல்லாம் மறந்துவிட்டோம் என்று சொன்னால் அது சரி அல்ல. இவைகளை

14th February 1955] [Sri C. Kandasamy]

யெல்லாம் எதிர்கட்சிக்காரர்கள் ஏதோ புதிதாகக்கண்டு பிடித்துச்சொல்லக் கூடிய பிரச்னைகள் அல்ல. பல பேர்கள், கம்யூனிஸ்ட் கட்சியினர் அதி தீவிரமான திட்டம் வேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்று கூறுகிறார் கள். இந்தத் தீவிரமான திட்டத்தை நாங்கள் சொல்லவில்லை. சென்ற காலத்தில் காங்கிரஸ்காரர்கள் கொடுத்திருந்த வாக்குறுதிகளை மறந்து விட்டால் அது எங்கள் குற்றமாகாது.

" கடன் சம்பந்தமாக காங்கிரஸ் கட்சி என்ன மனோபாவத்தைக் கொண் டிருந்தது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் இந்தச் சட்டம் எப்படிக் கொண்டு வரவேண்டும் என்பதைப் பற்றி நாங்கள் சொல் லக்கூடிய ஆலோசனைகளைச் சர்க்கார் மறுக்க மாட்டார்கள், அதை எதிர்க் கவும் மாட்டார்கள். பைஸ்பூரில் காங்கிரஸ் கட்சி நிறைவேற்றிய தீர்மா னம் என்ன ? அதாவது,

' A special tribunal should be appointed to enquire into this and all debts which are unconscionable and beyond the capacity of the peasants to pay should be liquidated. Meanwhile a moratorium should be declared and steps should be taken to provide cheap credit facilities.'

இதுதான் நீண்டகாலத்திற்கு முன்பு காங்கிரஸ், விவசாயிகளுடைய கடன் சம்பந்தமாக போட்டிருக்கக்கூடிய ஒரு திட்டம் என்பதை நாம் ஞாபகத் தில் வைத்துக்கொள்ளவேண்டும். இன்றைய தினம் காங்கிரஸ் சர்க்கார் மேற்சொன்ன தீர்மானத்தை மறந்து விட்டு ஏதோ கிளர்ச்சி நடக்கிறது, விவசாயிகளுடைய கடனைக் குறைக்க வேண்டும், அவர்கள் திருப்பித்தர வேண்டிய கடனை ஒத்திவைக்க வேண்டும் என்ற பிரச்னையில் இருக்கிறது. ஆகவே இன்றிருக்கக்கூடிய நிலைமையில் அவர்களுக்கு ஏதாவது செய்வோம் என்று கடமையை தட்டிக் கழிப்பதற்கு முயற்சி செய்யக்கூடாது.

" இந்த மசோதாவில் இருக்கும் நல்ல ஷரத்துக்களையோ இதனால் ஏற்படுகின்ற ஆதாயங்களையோ நான் மறுக்கத் தயாராக இல்லை. அதே சமயத்தில் அடிப்படைப் பிரச்னையில் ஒரு குறைந்த பக்ஷ பரிகாரம் காண் பதற்கு, கடன் பிரச்னை, தேசப் பிரச்னைகளில் ஒரு பகுதி என்று கணக்கிட்டு, தேசம் முன்னேற எந்த அளவுக்கு உதவி செய்யவேண்டு மென்று நாம் பார்க்க வேண்டும். இந்த மசோதாவில் அதற்கான வழி வகை இல்லை யென்பதைத் தான் நான் பார்க்க முடிகிறது. கடனைப் பற்றி நாம் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்தால் போதாது.

"1947-ம் வருஷத்தில் டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார். ஆந்திர ராஜ்யம் பிரிந்து போவ தற்கு முன் சென்னை ராஜ்யத்தில் உள்ள விவசாயிகளுடைய கடன் நிலை மையைப்பற்றி அவர் சொல்லும்பொழுது 218 கோடி ரூபாய் கடன் பட்டிருந்ததாக அவர் சொல்லி இருக்கிறார். எஞ்சியுள்ள சென்னை ராஜ் யத்தில் உள்ள விவசாயிகளுக்குக் குறைந்த பட்சம் 150 கோடி ரூபாயா வது கடன் இருக்கும் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். வருஷா வருஷம் 10 அல்லது 15 கோடி ரூபாய் வரையில் இந்த நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள், வட்டிக்காகச் செலவிடவேண் டிய நிலையில் இருக்கிறார்கள். ஏதோ 10 முதல் 100 ரூபாய் வரை பணத்தை வைத்துக்கொண்டு விவசாயிகளுக்குத் தேவைப் படும் சமயத் தில் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களைப் பற்றி நான் இப்பொழுது பேசவில்லை. வட்டிக்கு விடுவதையே தொழிலாகக் கொண்டிருக்கும் கூட் டத்தைப்பற்றிதான் நாம் சிந்தனை செய்து பார்க்கவேண்டும். தேசத்தின் உற்பத்திக்கோ, நன்மைக்கோ எதுவும் செய்யாமல் உட்கார்ந்துகொண்டு பணத்தை வட்டிக்கு விட்டுச் சுகவாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கும் கூட்டம் ஒழிக்கப்படவேண்டும். அவர்களால் நாட்டுக்கு எந்தவிதமான நன்மையும் கிடையாது.

[Sri C. Kandasamy] [14th February 1955

" கனம் அங்கத்தினர் ஸ்ரீமான் பஞ்சாட்சரம் செட்டியார் பேசும்பொழுது குடியானவர்களுக்குப் பாதுகாப்புப் கொடுக்கக்கூடாது என்று சொன்னதைக்கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். நிலத்தில் அக்கறை உடையவர்கள் என்று சொல்லும்பொழுது நிலத்தில் பாடுபடும் குடியானவர்கள் அல்லது குத்தகைக்காரர்களைத் தவிர வேறு யாருக்கு நிலத்தில் நேரிடையான அக்கறை இருக்க முடியும் ? கொஞ்ச நிலம் வைத்திருப்பவர்கள், அதிக நிலம் வைத்திருப்பவர்கள் என்பது பிரச்னை அல்ல. சாகுபடி செய்துகொண்டிருக்கக்கூடிய குடியானவர்கள் 10, 15 வருஷங்களுக்கு முன்பு ஒரு சில ஏக்கர் நிலங்களைச் சொந்தமாக வைத்துக்கொண்டிருந்தவர்கள் தான். விவசாயம் செய்ததில் கட்டுபிடியாகாமல் கடன்பட்டு, கடன் பாக்கி அதிகமாகி விட்டதின் காரணமாக புரோநோட் எழுதிக்கொடுத்து தவிக்கும் குடியானவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது நன்மை செய்ய வேண்டும் என்ற வகையில் தான் நாம் இந்தப் பிரச்னையைப் பார்க்க வேண்டும் என்று அவரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" விவசாயினுடைய வாங்கும் சக்தி அதிகரிக்க வேண்டுமானால், சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால், வியாபாரமும் தொழிலும் முன்னேற வேண்டுமானால் அவர்களுக்கு இருக்கக்கூடிய கடன் சுமை குறைக்கப்படவேண்டும். ஞாயமான கடன்கள் கொடுக்க வேண்டிய விதம், சக்தி ஆகியவைகள் கணக்கிட்டு ஒட்டுமொத்தமாகப் பிரச்னையைப் பரிசீலித்து நிரந்தரமாக இந்த நாட்டுக்கு நன்மை செய்யக் கூடிய சட்டம் வரும் என்று நான் எதிர் பார்த்தேன். கடன் பட்டிருப்பதைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஏதோ சில வருஷத் தவணைகளில் திருப்பிக்கொடுக்கலாம் என்று சட்டம் செய்துவிட்டால் மட்டும் போதாது. அதைப்பற்றி இப்போது நான் அதிகமாக விவாதிக்க வேண்டாமென்று நினைக்கிறேன். விளை பொருள்களின் விலைவாசியின் வீழ்ச்சி எந்த அளவுக்கு விவசாயிகளைப் பாதிக்கிறது, கடனைத் திருப்பிக்கொடுக்கக்கூடிய நிலையில் அவர்கள் இருக்கிறார்களா என்பதை யெல்லாம் கவனித்து கடன் வாய்தா சட்டத்தைக் கொஞ்சகாலத்திற்கு ஒத்திவைக்க வேண்டும். அதனிடையில் விரிவான வகையில் எல்லாக் கட்சியினருடைய அபிப்பிராயங்களையும் ஒன்று திரட்டி, அதன் பேரில் ஒரு விசாரணை நடத்தி, ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டுமென்ற எண்ணத்தில் தான் நாங்கள் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை ஒரு வருஷத்திற்காவது குறைந்த பட்சம் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். கடன் ஒத்தி வைப்பே இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் அல்ல என்பது எங்களுக்குத் தெரியும். சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்களைக்கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டு அவர்களுடைய அபிப்பிராயத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு இந்தப் பிரச்னை சம்பந்தப்பட்ட விஷயங்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இம்மாதிரியான ஒரு மசோதாவை சர்க்கார் கொண்டுவந்திருப்பது அவ்வளவு சரியல்ல. இந்த மசோதாவில் நல்ல அம்சங்களும் இருக்கின்றன. மூன்று வருஷ காலத்திற்குள் கடனைத் திருப்பித்தர வேண்டும் என்று சொல்லக்கூடிய வசதியை சர்க்கார் செய்து கொடுத்திருப்பது போற்றற்குரிய விஷயம் தான். ஆனால், அதே சந்தர்ப்பத்தில் சகல விவசாயிகளும் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், விலைவாசி எந்த அளவுக்கு வீழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது, விவசாயிகளுடைய வாழ்க்கை எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறது, கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாமல் அவர்கள் எப்படிக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், என்பதையெல்லாம் நம் சர்க்கார் கவனத்தில் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. யுத்த காலத்தில் விலைவாசிகள் ஏற்றமாக இருந்த காலத்தில் நிலப்பிரபுக்களின் கடன் சுமை 3 சதம் குறைந்திருந்தது. அதிகப்படியான நிலம் வைத்திருக்கிறவர்களுடைய கடன் குறைந்திருக்கிறது என்றும் மத்தியதர ஏழை விவசாயிகளுடைய கடன்கள் எல்லாம் ஏறி இருக்கிறது என்றும் டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு கூறி இருக்கிறார். குறிப்பாக விவசாயத் தொழிலாளர்களுடைய கடன் சுமை 45 சதம் உயர்ந்திருக்கிறது. ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கக் கூடிய விவசாயிகளுடைய கடன் 4 சத விகிதம் உயர்ந்திருக்கிறது. யுத்த காலத்தில் விலைவாசிகள் உச்ச நிலையில் இருந்த சமயத்திலேயே கடன் சுமை இப்படி ஏறி இருந்ததென்றுசொன்னால்

14th February 1955] [Sri C. Kandasamy]

தற்சமயம் விலைவாசிகள் ஒன்றுக்குப்பாதியாக சரிய ஆரம்பித்திருக்கும் போது கடன் சுமை எப்படி இருக்கும் என்பதை ஆராயவேண்டும். கடன் கொடுத்தவர்கள் ஷைலக் கைப்போல் கடனை வட்டியுடன் திருப்பித் தர வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். கொடுத்த கடன் திருப்பி கேட்கப்படுவது அரசியல் சட்டத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய ஒரு ஜீவாதார உரிமை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது ஓரளவு வாஸ்தவமாக இருந்தாலுங்கூட எதார்த்த நிலையில் நாம் கண்கொண்டு செய்யவேண்டும் என்பதில் எல்லா தரப்பினரும் அக்கரை கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக்கூறுகிறேன்.

" இது விஷயமாக செலக்ட் கமிட்டியில் நடந்த சில விஷயங்களை நான் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பாக எடுத்துக்காட்ட அவசியம் இருக்கிறதென்று நினைக்கிறேன். 4-30 p.m.

" $12\frac{1}{2}$ சத விகிதம் வட்டியும், கடன் முதலில் எட்டிலொரு பங்கையும் கொடுத்துவிடவேண்டுமென்று சொன்னால் மொத்தக் கடனில் சுமார் நான்கிலொருபங்கு கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும். அப்படிப் பார்க்கும்போது ஒரு வருஷ வட்டித்தொகை பாக்கியிருக்கும். இதே மாதிரியாகத்தான் மாரடோரியத்தில் ஒரு வருஷ பாக்கி கணக்குப்போட்டுப் பார்த்தால் நான்கில் ஒரு பங்காக இருக்கிறது. இதுதான் இன்று இருக்கக் கூடிய ஒரு நிலைமை. இதைப்பற்றி செலக்ட் கமிட்டியில் நன்கு பரிசீலிக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். இது வேடிக்கைக்காக சொல்வதல்ல, விளையாட்டுக்காகவும் சொல்லவதல்ல. கிராமங்களில் போய் பார்த்தால் தெரியும் விவசாயிகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று. ஒரு விவசாயி 50 ரூபாய் கடன் வாங்குவதாக இருந்தால் அவன் 100 ரூபாய்க்கு பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டிய துர்பாக்கிய நிலையில் தான் இருக்கிறான். அவர்கள் சாகுபடி செய்வதற்காக அவ்விதமாக கடன் வாங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. இந்த விதமாக லேவாதேவிக்காரர்கள் பணத்தைக்கூட்டி வாங்குவது அக்கிரமமாக இல்லையா ? ஏதோ வாழ்வதற் காக கஷ்டத்தைப் போக்குவதற்காக விவசாயிகள் கடன் வாங்கினால் அவர் களை இந்த விதமாக மோசம் செய்கிறார்கள். இந்த மோசக்காரர்களை ஏன் தண்டிக்கக்கூடாது என்று கேட்கிறேன். ஐம்பது ரூபாயை கையில் கொடுத்துவிட்டு 100 ரூபாய் என்று எழுத்து மூலமாக வாங்கினால் ஏழை யின் கதி என்னவாவது. ஏழைகளுக்கு பணம் இல்லாததால் அப்படி யெல்லாம் ஒன்றுக்கு இரண்டாக எழுதிக்கொடுக்க வேண்டியதாக இருக் கிறது. இப்படி அவர்களை மோசடி செய்பவர்களை ஏன் அரசாங்கம் சிறை யில் அடைக்கக்கூடாது ? ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் கொண்டு வந்தது தற்காலிக நிவாரணம் ஏற்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்டது. வாங்கிய கடனை ஒத்திவைக்க வழி ஏற்படுத்த இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் இப்பொழுது இருக்கும் சூழ் நிலை எப்படி இருக்கிறது. சாதாரண மாக கிராம பஞ்சாயத்துகளில் காங்கிரஸ்காரர்கள், கம்யூனிஸ்டுகள் மற்ற கட்சிகளும் அங்கு இருக்கிறார்கள். இவர்களை ஒன்று கூட்டி அங்கு இருக் கும் நிலைமையை பூரணமாக விசாரித்து ஜனநாயக ரீதியில் ஆலோசனை செய்து எந்த விதமாக கடனை தீர்ப்பதற்கு நிர்ணயிக்கவேண்டுமென்று முடிவு செய்யவேண்டும். இம்மாதிரியான பரிகாரம் ஜனங்களுக்கு நன்மை பழக்ககூடுமேயொழிய மற்றபடி இப்பொழுது கூறப்படும் மசோதாவினால் எதையும் செய்துவிடமுடியாது. கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது இதற்கெல்லாம் விளக்கம் தரவேண்டும். ஏழை விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும்படியும், அவர்கள் வக்கீலுக்கும் கோர்ட் டுக்கும் பணம் செலவு செய்யும் வழக்கம் மாறவேண்டும். இப்பொழுது அவர்கள் இருக்கும் நிலைமையில் ஒரு வருஷத்திற்கு நான்கில் ஒரு பகுதியைக் கட்டச்சொன்னால்கூட அவர்களால் கட்ட முடியாது. எந்த அளவுக்கு இந்த சட்டத்தினால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படவேண்டுமோ. அந்த அளவுக்கு செலக்கமிட்டியில் நன்கு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

[14th February 1955

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Mr. Deputy Speaker, Sir, various points of view were expressed by hon. Members on this Bill and, as I dreaded, some hon. Members went far beyond the scope of the Bill. They wandered far and wide and touched upon topics like the Planning Commission—what it ought to do and what it ought not to do—the rural credit system and so on. They explained how the incidence of indebtedness in the countryside should be reduced and also referred to the rising and falling price levels, and wanted something to be done to check the falling price level. They further wanted, Sir, that the benefit of this Bill should be extended even to workmen getting four rupees and five rupees daily as wages. Reference was also made to the system of ' double bonds ' in money-lending and so many other things. I must frankly submit that this poor Bill cannot be the panacea for all these evils. We have to contend against them, 4-40 p.m. of course, but this Bill cannot remedy all those evils. Now, Sir, let me deal with the criticisms made by hon. Members one by one. Reference was made to the 1938 Act where it was sought to scale down the debt. But even when the Temporary Relief Bill was brought in the year 1954, it was categorically pointed out that under that Bill it was not attempted to scale down debts as such but only to give a sort of breathing time to the ryot so that he can have some interval, during which he can make some money by reason of a good season and pay back the debt. So hon. Members should not go on harping on the point that this Bill does not attempt at scaling down the debt.

" Reference was made to prices. What has this Bill to do with prices? Prices are governed by so many factors. We cannot do anything in this Bill to control prices. Price is not only a State affair, but it is an All-India affair also. This Bill cannot touch even the fringe of that question.

" As regards labourers and others, I have already said they cannot come under the purview of this Bill because the main object of this Bill is to protect agriculturists and not others. In respect of protecting agriculturists we took a liberal view in the Act of 1954 in order to avoid any litigation or any question of inquiry, etc., and said that any body could come under the term ' agriculturist ' excepting those who have paid income-tax. But in the actual working of it we saw many people, rich people, taking advantage of it and not paying their debt. Such a thing was not expected but it happened. That is why Government have now taken steps to restrict the definition of the term ' agriculturist '.

" Sir, as regards, the appalling prevalence of debts in our country, it is an admitted fact. Some hon. Member said it was about 200 crores of rupees. Some others said it was more. Yesterday or day before yesterday, it was disclosed in the newspapers that in India about 150 crores of rupees are spent on jewellery alone for bedecking the brides in marriages. The turnover in this respect alone is about 600 crores of rupees a year. Our country is accustomed to certain ways of spending money not only on jewellery

14th February 1955] [Sri M. A. Manickavelu]

but on so many other ceremonies, essential and non-essential. So the debts in our country mount up. For that the remedy cannot be sought in this poor Agriculturists Indebted Relief Bill. We will have to do it by other measures and reform society. We cannot do that by this Bill. It is admitted that rural indebtedness is very great. Therefore other steps should be taken to remedy that. Already the Government in consultation with the Reserve Bank of India are trying to take steps to alleviate the distress caused on account of this appalling debt. This Bill cannot be of any help in these matters.

" Sir, the double bond system was referred to by the hon. Member coming from Vedasandur. His description of the evils of that system was very graphic. I also know that. That is in vogue for a long time. As a lawyer, I have handled cases of that sort. Where only hundred rupees were lent, promissory notes have been taken for two hundred rupees. Some people are very anxious to get money and therefore they fall a victim to this kind of transaction. This is not a new thing. I know this has been prevailing even 30 years ago. I have personal experience of these things. Therefore, there is no useful purpose served by going on mentioning it and even exaggerating it. Whatever rules or whatever Acts we may pass, people always find means to circumvent them. However much we may try to stop it, still there will be some loophole somewhere in the Act and people will take advantage of it. From that the hon. Member should not jump to the conclusion that everything is wrong. Simply because in a particular department or service, some people take bribes, we cannot say every one in the whole administration is taking bribes. On this we cannot infer that in every loan transaction, there is this double bond system.

" Sir, very severe criticisms were offered in respect of this measure. As I was thinking over them, an instance came to my mind. In my home town, there are two good friends of mine. One is a good man. Though he is not very rich—he is moderately well-to-do—he used to give donations for good causes. The other gentleman is very rich but he won't give anything at all to such causes. Therefore, all people used to rush to the man who though not rich gave with a good heart donations for good causes. People never used to approach the other man because he flatly refused to give anything to any cause. Therefore people went to the man who used to give and pestered him. Similarly this Government here have brought forward this Bill taking into account the hardship of the people caused by bad seasons. They brought in only a temporary relief measure. It was specifically called a temporary relief measure. When we introduced the Bill we said that it was intended only for a period of one year. There is the pent up force of the creditors waiting. If we lifted this protection, suddenly all these creditors will rush in and file suits. The protection given would be rendered useless. It would have been worse than not having given them any protection at all. Therefore Government

[Sri M. A. Manickavelu] [14th February 1955

thought that some more time should be given to the debtors, that these debtors should not be made a prey to the creditors. That is why we have brought in this Bill. Now, hon. Members complain 'You have not done this; you have not done that'. I would like to ask: 'What is it that has been done to such debtors in the neighbouring States like the Andhra State, the Travancore-Cochin State, Mysore and other States?'. No such measure has been brought at all in other States. Only in our State we have brought in this measure having regard to the difficulties experienced by the agriculturists. The same difficulties are experienced in other States also by the agriculturists. But they have not brought in such a measure as this. Simply because we have done this, like the man who gave donations was pestered by the people for more and more donations, hon. Members ask the Government: 'Why don't you do this; why don't you do that and all that'. The world is like that, human nature is like that. Only when a man is good, tolerant, yielding, giving something, he is made to give more. Generally people do not approach those who do not give anything at all. Hon. Members asking this Government to do more and more is like that. I submit the scope of the Bill is limited. We cannot do anything more than giving this much facility of allowing the people to pay their debts in certain instalments.

" What is the provision that we have made in respect of repayments of debts? The provision is that any debtor who has to pay a debt will be absolved from a vexatious suit and things of that sort, if he pays all the arrears of interest and one-eighth of the principal within three months and the balance in three annual instalments. Only the first payment has to be made within three months from 1st March that is before the end of June. Therefore ample time is granted to the debtor to find the money and pay back his debt. If the Government did anything more, it would rudely interfere with the credit system of our country. Hon. Members already expressed and now also express that the rural credit system has been rudely shaken and people have begun to feel nervous when they think of lending money. Government also feel that the rural credit system should not be jeopardized, and people should not become nervous about lending money because such a state of affairs will affect the people much more seriously. As was said by some hon. Member, this has really affected rural people. People who really wanted some money could not get it because the rural credit system had a rude shock. Therefore, Government had to bear that also in mind. They had also at the same time to bear the interests of the poor ryots. Now taking the interests of all concerned, Government have arrived at the golden mean and have brought forward this measure which I hope will satisfy both the creditors and the debtors. It gives ample time to the debtor to pay back his debt without any vexation. The creditors also will get their money in course of time.

" So, Sir, I submit this is really a very good measure which does not affect any particular section very seriously. Some hon.

Member said it is a political stunt. I do not know where the hon. Member senses the political stunt in this Bill. This is a simple proposition. The ryots were in difficulties. The Government have therefore come forward to do something of a temporary nature. There is no political stunt at all in this Bill. Then, the hon. Member from Tirunelveli, Sri Arumugham wanted that the chit fund should be exempted from the provisions of this Bill. His point is that the persons who conduct the chit fund collect money from the members for 12 or 20 months or whatever period it is, and they have to pay the whole amount in a lump sum every month to a particular man who bids it. They can do it only when the amount due is collected from the members. If it is not collected from the members from whom the amount is due and if they take shelter under this Bill, the conductors of the chit will find it very difficult to pay it to that particular man. So, his argument is that it not only affects persons who run chit funds but also affects the prospective bidders who also want money. Sir, we can look into that aspect of the question at the Select Committee stage and see what can be done in the matter. If it is reasonable, we shall provide proper safeguards for that purpose. 4-50 p.m.

" Then, Sir, a view has been expressed by an hon. Member that if the stipulated instalment is not paid within the time allowed in this Bill, whether there will be a penalty in the sense that the entire unpaid amount would be collected from the debtor. It is not the intention of the Government to do so. If that part of the Bill is not clear, we shall make it clear. The idea and the intention is that if the first instalment is not paid within the time allowed, the first instalment alone shall be collected and not the entire amount. The second instalment is due only in the second year and the third instalment in the third year. So, it can be collected only in instalments and not the entire amount at one time. It is not like a transaction, where if a particular payment is not paid within the time allowed, the whole amount has to be paid.

" My hon. Friend, Sri Panchaksharam asked to-day, as he did the other day, why the Government and the co-operatives alone—they are also creditors—should be exempted from the provisions of this Bill? Well, I know he has something to do with co-operative societies but that should not make him forget, what the exact object of the Government is in respect of this matter. The Government and the co-operative societies collect money for a good purpose. What is the purpose? I can just give an illustration. Take the coconut tree. The coconut tree takes water direct to its head and then gives it in the form of coconuts. So also the Government and the Co-operative Societis collect whatever money is available and give it back to the people in the form of loans and other useful ways. Therefore, there is a vast difference and we cannot bracket the Government and the Co-operatives with the ordinary creditors. I admit that even among ordinary people there are persons like coconut trees who will lend money. In the majority of cases, people will not lend money and only a few persons will lend it. But it is

[Sri M. A. Manickavelu] [14th February 1955

different in the case of the Government and the Co-operative Societies. The main object of the Co-operative Society is to raise money for the people and, therefore, there is no point in the objection raised by my hon. Friend, Sri Panchaksharam.

"Then the hon. Member, Sri Ratnam, traversed a very wide ground, made so many allegations and finally did not suggest anything in particular. He said that something should be done by the Government for indebted agriculturists. But I must tell him that the object of this Bill is not to give subsidy to the people who want money. Perhaps he thinks that this is like the well subsidy scheme. But this Bill is not like the subsidy scheme. This Bill is intended only to relieve people of their difficulties which they have had to undergo on account of continuous bad seasons. We want to give some respite to them to get out of their difficulties and we gave one such respite. Now, we find that it is not sufficient and we have to extend the life of the Bill a little more but in a different form.

"Sir, much criticism was made about lawyers. Not only here but even in public platforms, dramas, stages and elsewhere poor lawyers come in for criticism. I was also a lawyer but do not know why they come in for criticism. As pointed out by the hon. Member, Sri Daivasigamoney, lawyers are doing very good and useful work. They do a lot of social work also. If at all any section in the society was instrumental in getting freedom for our country, it was the lawyer section. So, in many ways they have been useful to the public. Simply because some lawyers misbehave, we cannot criticise the whole profession as such. I know very many good lawyers who, without taking any fees, conducted cases for poor litigants. Therefore, the wholesale condemnation of lawyers is not right.

"As regards the suggestions and criticisms made by the lawyer Members of this House, I do not want to deal with them now. They are all legal and intricate points. They should all be taken up for consideration at the Select Committee stage and I do not propose to touch upon those points now.

"Now, I have come very nearly to the end of my speech. With regard to the limit of Rs. 5,000 fixed in the Bill, I may say that a creditor who is worth Rs. 5,000 and less must not be prevented from collecting his dues. That limit was fixed with a good motive. There was criticism and objection from very small money-lenders, among whom many were women and widowers. People wanted such a provision in this Bill. But, of course, lawyers asked, "How are we going to find out whether a man is worth Rs. 5,000 or Rs. 10,000? There will be difficulty in finding it." They take only the border cases. But we can very easily find out whether a man is worth Rs. 5,000 or Rs. 10,000. The difficulty will arise only in border cases. Always there will be trouble in border cases, just as there will be trouble in the border areas in States, but it cannot be helped. The majority of cases will be clear cases and there will be no difficulty about that. In a legislation we cannot provide for every little

14th February 1955] [Sri M. A. Manickavelu]

thing. We must give some margin for border cases and it cannot be helped. With these words, I request the House to pass the Motion before the House."

MR. SPEAKER :—" The question is—

' That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 members (16 members of the Assembly and 8 members of the Council) to consider the Madras Indebted Agriculturists (Repayment of Debts) Bill, 1955, and that the following members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1 The Hon. Sri M. A. Manickavelu.
2 The Hon. Sri C. Subramaniam.
3 Sri K. Rajaram.
4 ,, M. Muni Reddy.
5 ,, N. Mounaguruswamy Naidu.
6 ,, K. Ishwara.
7 ,, A. Appu.
8 ,, V. R. Nagarajan.
9 ,, V. S. Chinnaswamy.
10 ,, T. C. Narayanan Nambiar.
11 ,, C. Kandasamy.
12 ,, K. M. Seethi Sahib.
13 ,, M. P. Subramanyam.
14 ,, P. Kandaswamy Gounder.
15 ,, M. Manickasundaram.
16 Dr. K. B. Menon.' "

The motion was put and carried.

IV.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* NOMINATION OF MEMBERS TO—

MR. SPEAKER :—" There are a number of Committees to be nominated by me and I want to announce the names of the Committee now.

(1) BUSINESS ADVISORY COMMITTEE:

" Under rule 188, I nominate the following hon. Members to be Members of the Business Advisory Committee :—

1 The Hon. the Speaker (*ex-officio Chairman*).
2 The Deputy Speaker (Sri B. Bakthavathsalu Naidu).
3 The Hon. Sri C. Subramaniam (Leader of the House).
4 The Hon. Sri M. A. Manickavelu.
5 Sri K. Rajaram (The Government Whip).
6 ,, M. Kalyanasundaram.
7 ,, S. Swayamprakasam.

8 Dr. K. B. Menon.
9 Sri V. Balakrishnan.
10 ,, K. Uppi.
11 ,, K. Vinayakam.
12 ,, P. T. Rajan.
13 ,, A. Ratnam.
14 ,, U. Muthuramalinga Thevar and
15 ,, S. C. C. Anthony Pillai.

(2) COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

" Under rule 206, I nominate the following hon. Members to be Members of the Committee on Government Assurances :—

1 The Hon. Sri C. Subramaniam (Leader of the House).
2 Sri K. Rajaram (Government Whip).
3 ,, M. R. Ramachandran.
4 ,, S. R. Arumugam.
5 ,, C. Kandasamy.
6 ,, K. T. Sreedaran.
7 ,, K. A. Senapati Gounder.

" I nominate the hon. Member, Sri C. Kandasamy to be the Chairman of this Committee.

(3) COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

5 p.m. " Under rule 195, I nominate the following hon. Members to be Members of the Committee on Subordinate Legislation :—

1 The Hon. Sri C. Subramaniam (Leader of the House).
2 Sri K. Rajaram (Government Whip).
3 ,, M. Jagannathan.
4 ,, P. S. Krishnaswamy Ayyangar.
5 ,, T. Ganapathy.
6 ,, K. P. Kuttikrishnan Nair.
7 ,, K. M. Seethi Sahib.
8 ,, K. C. Gopalan Unni.
9 ,, S. S. Kolkebail.
10 ,, V. Gopala Gounder.

" I nominate the hon. Member Sri S. S. Kolkebail to be the Chairman of this Committee."

V.—EXEMPTION OF SHOPS EMPLOYING THREE WORKERS AND LESS FROM THE SHOPS AND ESTABLISHMENTS ACT, 1947—DISCUSSION UNDER RULE 56 *RE*.

* SRI M. KALYANASUNDARAM :—" Mr. Speaker, Sir, I want to raise a discussion on an urgent matter of administration, viz.—

' G.O. No. 3416 of 4th December 1954 giving exemption to shops employing three and less than three workers from the provisions of the Madras Shops and Establishments Act, 1947, by which a large number of shop assistants in the State are denied the benefits of this Act by this exemption.'

"இதைப்பற்றி ஒரு மணி நேரம் விவாதம் வேண்டும் என்று நாங்கள் கூறியதற்கு முக்கிய காரணம், இதனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அலட்சியம் பண்ணக் கூடியது அல்ல என்பதால்தான் பெரும்பாலான, லட்சக்கண்க்கான தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், என்ற காரணத்திலிருந்து இதன் முக்கியத்வத்தை சர்க்கார் கவனிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு மணி நேர விவாதம் கேட்டுக்கொண்டேன். **1947**-ம் ஆண்டில், 'கடைச் சிப்பந்திகள் சட்டம்' (அதை விட விரிவாக தமிழில் மொழிபெயர்க்க முடியாது என்று நினைக்கிறேன்) வந்தது. இதற்குமுன் இருந்த தொழில் மந்திரி தெரிந்தோ தெரியாமலோ, காரணம் என்னவோ தெரியாது, இந்த 'கடைத் தொழிலாளர்கள் சட்டத்தை' நிறைவேற்றி வைத்து இருக்கிறார்கள். **1947**-ம் ஆண்டில் அன்று பெரும்பாலான தொழிலாளர்கள், குறிப்பாக பாங்குகளிலும் கடைகளிலும், பெரிய வெள்ளைக்காரன் கம்பெனிகளிலுள்ள தொழிலாளர்களின் கிளர்ச்சியின் பயனாக, அன்றைய சர்க்கார் இச்சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்போது இந்தச் சட்டத்தை ஒரு வரவேற்கத் தக்க சட்டம் என்று தொழிலாளர்கள் பிரதிநிதிகள் போற்றினார்கள். அப்படி இச்சட்டத்தை வரவேற்றவர்களில் நானும் ஒருவன். இச்சட்டத்தில் ஓரளவு சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. அதாவது தொழிலாளர்களுக்கென்ற குறிப்பிட்ட வேலை நேரம், சம்பளப் பட்டுவாடா மற்றும் லீவு வசதிகள் போன்ற உரிமைகள் இச்சட்டத்தில் கண்டுள்ளன. சில்லரைக் கம்பெனிகளிலும், கடைகளிலும் வேலை செய்யும் ஊழியர்களுக்கு சில உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. அந்த உரிமைகள் பின்வருமாறு :—

சாதாரண தின (**Daily hours of work**) வேலை நேரம், 8 மணி காலந்தான். வாரத்திற்கு ஒரு நாள் சம்பளத்தோடு விடுமுறை. வருடம் ஒன்றுக்கு **12** நாள் **Casual leave, 12** நாள் **privilege leave, 12** நாள் **sick leave,** இப்பேற்பட்ட வசதிகளும், இன்னும் குறிப்பிட்ட 8 மணி நேரத்திற்கு அதிகமாக வேலை செய்தால் அதற்கான (**over-time allowance**) அதிக சம்பள வசதி, திடீரென்று வேலையிலிருந்து நீக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட ஊழியர் **Labour Commissioner**-க்கு அப்பீல் செய்து கொண்டு பரிகாரம் தேடிக்கொள்ள உரிமை, இம்மாதிரி தொழிலாளர்களுக்கு பாதுகாப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் இதற்கு முந்திய மந்திரி சபை (அதாவது ராஜாஜி மந்திரி சபை) தற்போதைய மந்திரி சபைக்கும், முந்திய மந்திரி சபைக்கும் கொள்கை வித்தியாசம் கிடையாது. ஆட்கள் மாராட்டமே தவிர, கொள்கை வேறு அல்ல, அந்த மந்திரி சபை **1952**-ம் ஆண்டில் அதிகாரம் வந்த உடனே இச்சட்டத்தை தவறாக முன் மந்திரி சபை செய்து விட்டார்கள் என்று தோன்றியதோ என்னமோ இச்சட்டத்திலிருந்து யார் யாருக்கு விதி விலக்கு அளிக்கலாம் என்ற பிரச்னையை ஆராய்ச்சி செய்து ஒரு ரிப்போர்ட் சமர்பிக்க, ஒரு கமிட்டியையோ, அல்லது உத்தியோகப் பற்றற்ற (**non-official**) நபரையோ நியமிக்காமல், சர்க்காரின் கீழ் வேலை செய்யும் ஒரு ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தரை **Special Officer** ஆக நியமித்தார்கள். அவர் நீண்ட விசாரணைக்குப் பிறகு குறிப்பிட்ட அறிக்கையை நான் இச்சபையின் கவனத்திற்கு இப்போது கொண்டு வருகின்றேன். விதி விலக்கு அளிக்கலாமா, கூடாதா என்ற பிரச்னைதான் அவருக்கு கொடுக்கப்பட்டது ; அவர் கூறுவதாவது :—

'Since the Act has been passed solely with a view to ameliorate the condition of labour in establishments and shops and the provisions of the Act are not excessive and cannot be said to cause undue hardship to employers, I submit that it should be observed as a fixed principle that no exemption of any kind should be granted from any of the provisions of the Act.'

இவ்வளவு தெளிவாக இந்தச்சட்டத்தின் தன்மையைப்பற்றியும் அது எவ்வளவு நியாயமானது என்பதைப்பற்றியும், அவர் கூறியிருக்கிறார். இந்த சட்டத்தின் கீழ் தரப்பட்டுள்ள உரிமைகள், வியாபாரிகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் கொடுமையாக பாதிக்காது என்றும் அவர் கூறியிருக்கிறார். விதி விலக்கு கொடுக்க அவசியம் கிடையாது என்று அவர் சொல்லி

யிருக்கிறார். அப்படி இருந்தாலும் எந்தெந்த சந்தர்ப்பங்களில் விதி விலக்கு அளிக்கப்படலாம் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய அசந்தர்ப்பங்களைத் தீர்க்கும் நோக்கத்தை முன்னிட்டு சில விதி விலக்குகளை அவர் கூறி யிருக்கிறார். விதி விலக்கு அளிப்பது சம்பந்தமாக கொள்கையை தெளிவுபடுத்தாமல் இருப்பது நல்லது அல்ல என்று அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார். இப்படி இந்த அதிகாரி ரிப்போர்ட் சமர்ப்பிப்பார் என்று சர்க்கார் எதிர்பார்க்க வில்லையோ என்னமோ ரிப்போர்ட் வந்த பிறகும் சர்க்கார் இறுதியாக முடிவு செய்தது என்னவென்றால் 'அதிகாரி செய்த சிபார்சுகள் அனர்த்தம் அந்த சிபார்சுகளை ஏற்றுக்கொள்ள முடியாது' என்பதுதான். **Exemption** கொடுக்கஅதிகாரம் இருக்கத்தான் வேண்டும் என்று **Departmental Secretary** கையெழுத்து போட்ட உத்திரவு இருக்கிறது. அவராகவா கையெழுத்து போட்டிருப்பார்? மந்திரிகளின்கீழ் வேலை பார்க்கும் அவர், மந்திரி சொல்லித்தான் போட்டிருப்பார். **1954**-ம் ஆண்டு டிசம்பர் **4**-ம் தேதி, ஜி. ஓ. நெ. **3416**-ல் உத்திரவு பிரப்பிக்கப்பட்டது. அது என்ன வென்றால் 3 அல்லது அதற்குட்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் கடைகளும் வியாபார ஸ்தலங்களும் இச்சட்டத்தை அமல் நடத்த வேண்டியது இல்லை என்பது. இம்மாதிரி ஒரு நிமிடத்தில் பேனா முனையில் அடித்துத் தள்ளி உத்திரவை அளித்து விட்டார்கள். இவ்வுத்திரவை பிறப்பிக்க என்ன காரணம்? யார் இம்மாதிரி விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று சர்க்காரிடம் கோரிக்கை செய்தார்கள்? இதில் என்ன நியாயம் இருக்கிறது? இதையெல்லாம் சர்க்கார் சிந்தனை செய்தார்களா? டிசம்பர் மாதம் சட்டசபை நடந்து கொண்டிருந்ததே அப்போது இவ்வுத்திரவு போடுவதற்கு முன், சட்ட சபையின் முன் இவ்வுத்திரவைக் கொண்டு வந்து, சபையின் அங்கீகாரம் பெற்றார்களா? சபையின் கவனத்திற்காவது இது வந்ததுண்டா? சட்டத்தின் கீழ் தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்ற காரணத்தால், பல லட்சக் கணக்கான தொழிலாளர்களின் உரிமைகளின்மேல் கை வைத்து விட்டார்கள். கடைத் தொழிலாளர்களின் மேல் எங்களுக்கு மிக அக்கரை இருக்கிறது, எதிர்க் கட்சியினரைக் காட்டிலும், என்று மந்திரியார் பதில் சொல்லி விட்டால் மட்டும் பிரயோஜனம் இல்லை. நடை முறையில் காட்ட வேண்டும். தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரை, அவர்களின் உரிமையை பரிக்க வேண்டு மென்ற நோக்கத்துடனே, சர்க்கார் இவ்வுத்திரவை பிறப்பித்திருக்கிறார்கள். பொதுவாக இப்படி உத்திரவை பிரப்பிக்கக்காரணம் என்ன? மூன்றும் அதற்கும் கீழ் பட்ட தொழிலாளர்கள் 8 மணி நேரம் வேலை செய்தல், வேலையிலிருந்து காரணமில்லாமல் நீக்கப்பட்டால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்தல், இதனால் எல்லாம் தேசத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுவிடுமா என்ன? எதற்காக இந்த உத்திரவு பிறப்பித்தார்கள்? இதைச் சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

5-10 p.m. "இப்போது சர்க்கார் நெய்வேலி போன்ற ஸ்தாபனங்களை நடத்திக் கொண்டு வருகிறார்கள். 'இப்படி உத்திரவு பிறப்பித்தீர்களே, நீங்களே என்ன யோக்கியதையுடன் உங்கள் தொழிலாளர்களை நடத்துகிறீர்கள்' என்று வியாபாரிகள் கேட்டு விடுவார்களே என்ற பயத்தின் காரணமாக இந்த மாதிரி உத்திரவை போட்டு விட்டு, ஒரு வருட காலத்திற்கு சட்டத்தை அமல் நடத்த மாட்டோம் என்று சலுகை காண்பிப்பதற்காக இந்த உத்திரவை போட்டிருக்கிறார்கள் என்று நம்ப வேண்டியிருக்கிறது. சர்க்காரின் கொள்கை தொழிலாளரின் விசேஷ உரிமைகளை (சட்டத்தில் கண்டுள்ளதை) ஒடுக்க வேண்டும் என்பதுதான். இந்த ஒரு நடவடிக்கையால் மட்டும் அல்ல, பல நடவடிக்கைகளால் இது தெரிகிறது. அன்று நெய்வேலியைப் பற்றி குறிப்பிட்ட காலத்தில் கனம் மந்திரி அவர்கள் பதட்டப்பட்டார். உத் வேகத்துடனும் பேசினார். அப்பொழுது தகாத வார்த்தைகளையும் உபயோகித்து இருக்கிறார் என்று நினைக்கிறேன். இந்த விஷயத்தை இப்பொழுது அவருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அந்த மாதிரி அன்று சபையில் விவாதம் கேட்கப்போகிறேன் என்று தெரிந்த பிறகு எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ் (திருச்சி) சூப்பரண

14th February 1955] [Sri M. Kalyanasundaram]

டெண்டுக்கு கடிதம் எழுதி அது உண்மையா அல்லவா என்று விசாரித்திருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அவர் விசாரணை செய்திருக்க வேண்டும் அல்லது வேறு விதமாக இருந்தால் அது ஏமாற்றுவதாக இருக்கலாம்.''

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' என்ன கடிதம் எழுதினேன் என்பதை அவர் தயவு செய்து சொல்லவேண்டும். ''

*SRI M. KALYANASUNDARAM :—'' எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுக்கு கடிதம் எழுதியிருந்தால் அதை தயவு செய்து ரத்து செய்ய வேண்டும் என்று எழுதி யிருக்கலாம். அந்தக் கடிதம் போக வேண்டிய காரணம் என்ன? அதைப்பற்றி எங்களால் நிரூபிக்க முடியும். நாங்கள் ஆதாரத்தோடுதான் சொல்லியிருக்கிறோம். ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை. அதைப்பற்றி சொல்லும்போது கனம் மந்திரி அவர்களுக்கு ஏன் கோபம் வருகிறது? அவர்களுடைய கொள்கையைத்தான் எடுத்துக்காட்டுகிறோம். உண்மையைக் கூறினால் அவருக்கு பதட்டம் வருகிறது என்பதாகத்தான் நாங்கள் முடிவிற்கு வர வேண்டியதாக இருக்கிறது.''

(Mr. Speaker in the Chair.)

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' இன்று விவாதிக்கப்படும் விஷயங்களுக்குப் புறம்பாகப் போனால் அதற்கு பதில் சொல்ல குறிப்பிட்ட நேரத்தில் அவகாசமிராது எனினும் அதற்கு கனம் எதிர்க் கட்சி டிபுடி லீடர் சொன்னதற்கு உடனே பதில் நான் சொல்லுகிறேன். **Employment Exchange** ஜெனரல் சூப்ரண்டெண்டுக்கு எழுதியதைப் பற்றி முன் விவாதத்திற்கு முன்னமேயே கேட்டேன். இந்த மாதிரி யாராவது கடிதம் எழுதியிருக்கிறார்களா? அதன் நிலைமை என்ன? யார் கேட்டிருக்கிறார்கள், பத்திரிகையில் வந்திருக்கிறதே, என்று கேட்டேன் அம்மாதிரி ஒன்றுமில்லை என்று என்னிடம் சொன்னார்.''

*SRI M. KALYANASUNDARAM :—'' இது விஷயமாக வேறு கேள்வி தனியாக, போட்டிருக்கிறேன். அந்த சமயம் மந்திரியாருக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்.

'' இப்பொழுது இருக்கும் விஷயத்திற்கு வருவோம். இதற்கும் அதற்கும் என்ன சந்தர்ப்பம் என்றால், இப்பொழுது இருக்கும் உரிமைகளையும் சர்க்கார் தடுக்கவேண்டும் என்றிருக்கிறார்கள் என்பதற்காகவும், அதை எடுத்துக் காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் அதைக் கொண்டு வந்தேன். அந்தப் பிரச்னையை திரும்பவும் கிளப்ப வேண்டும் என்பதற்காக அல்ல. அதைப்பற்றி பேசுவதற்கு இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அல்ல.

'' இந்த விதிவிலக்கு கொடுத்திருப்பதைப் பார்த்தால் சென்னை நகரம் நீங்கலாக இந்த ராஜ்யம் பூராவும் பெரும் பகுதி வியாபாரிகள் தப்பித்துக் கொண்டு விட்டார்கள். கடை சிப்பந்திகளுடைய நிலைமை 1947-க்கு முன்பு எப்படி இருந்ததோ அந்த நிலைமைக்கு இப்பொழுதும் வந்து விட்டது. கடை சிப்பந்திகளுக்கு எப்படிப்பட்ட கஷ்ட நிலைமை வந்திருக்கிறது என்பதை பற்றிய புகார்கள் கொண்ட மகஜர்கள் நிறைய வந்திருக்கின்றன. அதையும் என்னுடைய பேச்சின் முடிவில் சபையின் முன்பு சமர்ப்பிக்கப் போகிறேன். குறிப்பாக கடை சிப்பந்திகள் அதில் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த விலக்கை பயன்படுத்திக் கொண்டு கடைகளில் 5 அல்லது 4 பேர்களை வைத்துக்கொண்டிருக்கும் வியாபாரிகள் மூன்று பேர்களாக்கி வருகிறார்கள். அப்படி இப்பொழுது ஆட்குறைப்பு நடந்து வருகிறது. இந்த விதி விலக்கை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அதனால் பல தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றும் பல கடைகளில் இன்னும் அதிகப்படியான ஆட்குறைப்பு வருமோ

என்று பயந்துகொண்டிருக்கிறார்கள். இந்த விதத்தில் கடை சிப்பந்திகளுக்கு இப்பொழுது பீதி ஏற்பட்டிருக்கிறது. 1947-க்கு முன்பு 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்றிருந்தது. இந்த விதி விலக்கினால் கடை முதலாளிகள் சிப்பந்திகளை நினைத்த மாத்திரத்தில் வேலையை விட்டு டிஸ்மிஸ் செய்யலாம். அவர்களுக்குக்கொடுக்கப்பட்ட உரிமைகள் இனி மேலும் கொடுக்கக்கூடாது என்கிற நிலைமையில் இந்த விதிவிலக்கு மூலம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கடை சிப்பந்திகள் பலமான தொழில் சங்கங்களை வைத்துக்கொண்டிருக்க வில்லை. பாக்டரி தொழிலாளிகள் மாகாணம் பூராவும் தொழிற் சங்கங்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல இந்த சிறிய கடை சிப்பந்திகளுக்குக்கிடையாது. இவர்களுக்கு பலம் பொருந்திய சங்கங்கள் இல்லை. அவர்களுடைய குறைகளைப் பற்றி எடுத்துச் சொல்லுவதற்கும் அவர்களுக்கு சக்தி இல்லை. அதனால் தான் அவர்களிடத்தில் சர்க்காருக்கு அதிகப்படியான பொறுப்பு இருக்கிறது. இப்படி பலமில்லாதவர்களுக்கு விரோதமாக கடைக்காரர்களுக்கு விதி விலக்குக் கொடுக்கலாமா என்பதை சர்க்கார் சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும். இந்தக் கடை சிப்பந்திகள் பகுதிகளுக்கும் இந்த ஷாப் அசிஸ்டெண்ட் சட்டத்தை விரிவுபடுத்தியிருக்க வேண்டும். இப்படியேதான் தொழில் சங்கங்களும் கேட்டுக் கொண்டு வருகிறது. ஸ்பெஷல் ஆபீசர்கள் கூட இதை விரிவுபடுத்துவதற்கு சிபாரிசு செய்திருக்கிறார்கள். அந்த சிபாரிசை அடிப்படையாகக் கொண்டே நான் உத்யோகப் பற்றற்ற முறையில் ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். அதற்கு நோட்டீசும் கொடுத்திருக்கிறேன். சோஷலிசம் என்று பேசுகிற காலத்தில் மந்திரி அவர்கள் இம்மாதிரி உத்தரவுகள் பிறப்பிப்பது முறையா ? கடை சிப்பந்திகளுடைய நன்மையை உத்தேசித்துதான் கேட்கிறேன். ஆகையால் டிசம்பர் 4-ம் தேதி போட்ட உத்தரவை ரத்து செய்துவிட்டு சட்டத்தை மீண்டும் எல்லா கடைகளுக்கும் அமுல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.''

Sri M. PALANIYANDI :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஷாப் அசிஸ்டெண்ட் சட்டத்திற்கு விதி விலக்கு அளிக்கப்பட்டது பற்றி ஒரு மணி நேர விவாதம் எடுத்துப்பேசும் காலத்தில் ஸ்ரீ எம். கலியாணசுந்தரம் நிச்சயமாக இந்த விதி விலக்கு அளிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். டிசம்பர் மாதம் 4-ம் தேதி ஒரு உத்தரவு பிரகாரம் அப்படிப்பட்ட விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் வந்த பிறகு இதைப்போல பல விதிவிலக்குகள் வந்திருக்கின்றன. உண்மையிலேயே இந்த சட்டம் வந்த பிறகு தொழிலாளிகள் சங்கங்கள் அமைத்துக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட சங்கங்கள் இயங்கும் இடங்களில் எல்லா தொழிளாளிகளும் கடைகளிலும் காப்பி ஹோட்டல்களிலும் இன்னும் பல ஸ்தாபனங்களில் அவரவர்களுக்கு சரியானபடி ஸ்தாபனங்கள் அமைத்துக்கொண்டு இருக்கிறார்கள். சட்டம் வருவதற்கு முன்பு இருந்த நிலைமை வேறு. இந்த சட்டம் வந்த பிறகு தொழிலாளிகள் இந்த அரசாங்கத்தை போற்றிக்கொண்டு வருகிறார்கள். பிறகு இந்த சட்டத்திற்கு பல வித விதிவிலக்குகள் கொடுத்துக்கொடுத்து கடைசி முடிவாக மூன்று பேர்கள் அதற்கு குறைவாக இருக்கும் கடைகளுக்கும் இந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட விதிவிலக்கு வந்திருப்பதால் அதை எதிர்த்து போராடு வதற்கு அந்த கீழ்ப்பட்ட தொழிலாளர்களுக்கு சக்தி கிடையாது. பலமும் கிடையாது. பெரிய தொழிற்சங்கங்கள் ஸ்தாபனங்களை வைத்துக்கொண்டு போராடிக்கொண்டு வருகிறார்கள். தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லிக்கொண்டும் வருகிறார்கள். ஆனால் கீழ்த்தர சிப்பந்திகளுக்கு அப்படிப்பட்ட சங்கங்கள் கிடையாது. அவர்கள் போராடுவதற்கு சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். பெரிய ஸ்தாபனங்களாக இருந்தால் முதலாளிகளிடம் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லி அவர்களுக்குள்ள மனவேற்றுமையை எடுத்துச் சொல்லி காரியங்களை வெற்றிபெறச் செய்ய முடியும். பேச்சு வார்த்தைகள் மூலமாகவும் வெற்றி பெற முடியும். அதன்படி இந்தச் சட்டத்தை

14th February 1955] [Sri M. Palaniyandi]

அமுல் நடத்தவும் முடியும். சமாதான முறையில் வெற்றி பெற்று வரலாம். ஆனால் இப்படிப்பட்ட சிறிய கடை சிப்பந்திகளுக்கு அப்படிப்பட்ட சௌகர்யங்கள் கிடையாது. ஆபீசர்கள் நல்ல எண்ணம் படைத்தவர்களாக இருந்தால்தான் இந்தக் கடை சிப்பந்திகளுடைய நிலைமை நன்றாக இருக்கும். இண்டஸ்ட்ரியல் டிஸ்பூட் ஆக்ட் இருக்கிறது. அது எந்த விதத்திலும் சௌகர்யமாக இருக்கிறது. அதன்படி இந்தச் சட்டத்தை வைத்துக் கொள்ளவேண்டும். இந்த திருத்தத்தினால் பழையபடியே சிப்பந்திகள் காலையில் 6 மணிக்கு வந்துவிட்டு இரவு 10 மணி வரையில் கடையில் வேலை செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. காலையில் சிப்பந்தி வந்து கடையைத்திறந்து வைத்துக்கொண்டிருக்கவேண்டும். பகலில் கடை முதலாளி வருவான். அதன்பின் சிப்பந்தி சாப்பாட்டுக்குப் போக வேண்டும். மறுபடியும் முதலாளி வரும்வரையில் சிப்பந்தி கடையிலேயே இருக்கவேண்டும். அவ்விதம் இரவு பத்து மணி வரையில் கடையில் இருந்து வேலை செய்யவேண்டும். இப்படிப்பட்ட நிலைமை வந்துவிடும். இதனால் சிப்பந்திகளுக்கு சௌகர்யம் கிடையாது. சுமார் 1,000 ரூபாய் முதல் போட்ட முதலாளியினிடம் தொழிலாளிகள் இந்தப்படி வேலை செய்ய வேண்டியதாக ஏற்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் இந்தச் சட்டத்தை இந்த டிசம்பர் 4-ம் தேதி திருத்தத்தினால்தான். இந்த விதி விலக்கின் காரணமாக நாட்டிலே என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். சர்க்கார் மூன்று பேர்கள் அல்லது அதற்குக் குறைவாகவுள்ள தொழிற் ஸ்தாபனங்களுக்கு, கடைகளுக்கு இந்தச் சட்டம் செல்லாது என்று விதி விலக்கு அளித்ததினால் ஒவ்வொரு கடைக்காரர்களும் தங்கள் கடையில் நான்குபேர், ஐந்து பேர் வேலை செய்துகொண்டிருந்தால் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவேண்டுமென்பதற்காக தொழிலாளர்களின் எண்ணிக்கையை மூன்று பேர்களாகக் குறைத்துக் கொண்டுவிட்டார்கள். இதனால் வேலையிழந்தவர்கள் இரண்டு பேர்.

5.20 p.m.

இப்படியாகவே பார்த்தால் பலபல இடங்களில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இந்த விதிவிலக்கினால் பலியிடப்பட்டிருக்கிறார்கள். வேலையைவிட்டு நீக்கும்பொழுது எங்களுக்கு வியாபாரம் இல்லை, ஆகவே எங்களுக்கு ஐந்து ஆட்கள் வைத்துக்கொள்ள கட்டாது, மூன்று பேர்கள் தான் வைத்துக்கொள்வோம் என்று சொல்லிவிட்டார்கள். ஆபீசர்களால் அவர்களை ஒன்றும் செய்யமுடியாத நிலைமை உண்டாகிவிட்டது. இந்த விதிவிலக்குச் சட்டம் வந்தவுடனேயே எப்படி அதிலிருந்து தாங்களும் தப்பித்துக்கொள்வது என்றே பல கடைக்காரர்கள் சதித் திட்டம் போட ஆரம்பித்துவிட்டார்கள். எப்படியாவது இருக்கக்கூடிய தொழிலாளர்களிடம் எட்டு மணிக்குப் பதிலாக நாள் பூராவும் வேலை வாங்க வேண்டும். கொடுக்கிற சொற்ப சம்பளத்திற்கு அவர்களுடைய உயிரையே உறிஞ்ச வேண்டும் என்று திட்டம் போட்டுவிட்டார்கள். இந்த மாதிரியாக விதிவிலக்கு அளித்ததினால் வந்த கேடுதான் இது. ஆகவே சோஷலிஸத் தன்மை வாய்ந்த சமுதாயத்தை அமைக்கப் போகிறோம் என்கின்ற இந்தச் சர்க்கார், தங்களை க்ஷேம நல சர்க்கார் என்று சொல்லிக் கொள்ளுகின்ற இவர்கள் இந்த விஷயத்தை உடனடியாகப் பரிசீலனை செய்யவேண்டும். இதில் கட்சி மனப்பான்மைக்கே இடமில்லை. தொழிலாளர்களுடைய நலனை மட்டும் கவனிக்கவேண்டுமே தவிர கட்சியின் விருப்பு வெறுப்பு உணர்ச்சிக்கு இந்த விஷயத்தில் இடம் கொடுக்கக் கூடாது. இப்பொழுதே ஏராளமான மகஜர்கள் இந்த விதிவிலக்கு உத்திரவை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று எல்லோருக்கும் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே உடனடியாக கனம் மந்திரி அவர்களை இந்த விதிவிலக்கை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தொழிலாளர்களுடைய நலனுக்குப் பங்கம் விளைவிக்கலாம், அவர்களுக்கு லீவு இல்லாமல் அடிக்கலாம், நாள்பூரா வேலை வாங்கலாம் என்ற எண்ணம் முதலாளிகளிடையே வளர்ந்து கொண்டு வரும் வகையில் இந்த விதிவிலக்கு உத்திரவை இன்னும் சில நாள் கூட நீடிக்கும்படி செய்யாதீர்கள் என்று மறுபடியும் கேட்டுக்கொண்டு இந்த விதிவிலக்கு உத்திரவை உடனடியாக ரத்து செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக்கொள்ளுகிறேன்.”

[14th February 1955

* **Sri S. PAKKIRISAWMI PILLAI** :—" கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது நண்பர் ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் அவர்கள் எடுத்துரைத்தவற்றையெல்லாம் நானும் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

" 1947-ம் வருஷத்தில் நம் நாட்டிலே முதன் முதலாக சென்னையில்தான் இந்த ஷாப் சட்டம் கொண்டுவரப்பட்டது. கொண்டுவந்தவுடன் அநேக தொழிலாளர்கள் தாங்கள் இதுவரையில் அனுபவித்துவந்த கஷ்டங்களை எல்லாம் போக்கிக்கொள்ள பல தொழிற் சங்கங்களை தங்கள் தொழிலடிப் படையின்மேல் அமைத்துக் கொண்டார்கள். சென்னை ராயபுரத்திலும், தங்கசாலையிலும், வேப்பேரியிலும், பார்பர்ஸ் ப்ரிட்ஜ் பக்கத்திலும் பல மரத்தொட்டிகள் இருக்கின்றன. இவற்றுக்கு முதலாளிகள் சாதாரணமாக மூன்று நான்கு பேர்கள் இருப்பார்கள். ஆனால் ஒன்று அல்லது இரண்டு தொழிலாளர்களே இருப்பார்கள். இவர்கள் மரத்தைத் தூக்குவதும், அதனை அறுப்பதும், விற்பனை செய்வதுமான வேலைக்காக அமர்த்தப் பட்டிருப்பவர்கள். இந்தமாதிரியான வேலையில் ஈடுபட்டிருக்கக் கூடிய இந்தத் தொழிலாளிகள் காலையில் மரத்தொட்டிக்குப் போனால் மாலை எட்டு மணிக்கோ, ஒன்பது மணிக்கோதான் அங்கிருந்து முதலாளிகள் மனப் போக்குக்குகந்தவாறு வீட்டிற்குத் திரும்ப முடியும். ஆனால் இந்தச் சட்டம் வந்த பிற்பாடு அவர்களுக்குப் பெரிய நன்மை இதனால் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட தொழிலாளர்களிடமும்கூட எட்டு மணிதான் வேலை வாங்க வேண்டும், அவர்களுக்கு வருஷத்தில் பன்னிரண்டு நாட்கள் லீவு கொடுக்க வேண்டும், வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை அளிக்கவேண்டும் என்றெல் லாம் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்ததால் அவர்கள் பல தொழிற்சங்கங்களை அமைத்துக்கொண்டு சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிக்க முற்பட்டார்கள். மேலும் அவர்களை அநியாயமாக வேலையைவிட்டு நீக்கி விட்டாலும் சட்டத்தில் கண்டுள்ள 41-வது ஷரத்துப்படி அவர்கள் நஷ்ட ஈடு கோரி கேஸ் போடவும், திரும்பவும் அந்த முதலாளி அவர்களையே வேலைக்கு வைத்துக்கொள்ளவும் வற்புறுத்த வசதியிருந்தது. அந்தச் சட்டத்தின் உதவியைக்கொண்டு ஏராளமான தொழிலாளர்கள் திரும்பவும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். சட்டம் தெரியாத முதலாளிகளுக்கும்கூட சட்டம் இன்னதென்று தெரிந்துகொள்ள வசதியிருந்தது. அனாவசியமாக தொழிலாளர்களுடைய உரிமையை நசுக்கினால் ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற மனப்பான்மையை முதலாளிகளிடையே வளர்ப்பதற்கு அந்தச் சட்டம் வெகு அனுகூலமாக இருந்தது.

" ஆனால் அந்தச் சட்டத்திற்கு சர்க்கார் இப்பொழுது அளித்திருக்கும்படி யான விதிவிலக்கு தொழிலாளர்களுக்கு ஏமாற்றத்தையே அளித்திருக்கிறது. அவர்கள் மனம் வெதும்பி பீதி அடைந்திருக்கிறார்கள். அதோடு பல கடைக்காரர்கள் தங்களுடைய கடைகளில் வேலை செய்யும் மேல்கொண்டு இருக்கும் ஆட்களின் எண்ணிக்கையை மூன்றாகக் குறைத்துக் கொள்ள பல பேர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுவதாகவும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தமாதிரியான விதிவிலக்கு இருக்குமானால் கட்டாயமாக தொழிலாளர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட லீவு வசதியை அனுபவிக்க முடியாது, எட்டு மணி நேரம்தான் வேலை செய்வோம் என்கின்ற உரிமையை அனுபவிக்க முடியாது, வேலையைவிட்டு அநியாயமாக நீக்கப்பட்டாலும் நஷ்டஈடு கோர முடியாது, திரும்பவும் வேலைக்கே வைத் துக்கொள்ளும்படி முதலாளிகளை நிர்ப்பந்தம் செய்ய முடியாது. ஆகவே லீவு வசதி, மற்றெல்லா வசதிகளையும் தொழிலாளர்களுக்கு அளிக்கும் அந்தச் சட்டத்தில் எந்தவிதமான திருத்தமும், விதிவிலக்கும் இன்றி அது அப்படியே இருந்து கொண்டிருக்க வேண்டும்.

" ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன. உதாரணமாக செக்ஷன் 41-ன்கீழ் அநியாயமாக வேலையைவிட்டு நீக்கப்பட்ட தொழிலாளர்களை திரும்பவும் வேலைக்கு வைத்துக்கொள்ளவேண்டுமென்று சர்க்கார் உத்திரவு போட்டால்கூட அந்த உத்திரவுக்கு சில

14th February 1955] [Sri S. Pakkirisawmi Pillai]

முதலாளிகளே பணிகிருர்கள். சிலர் அந்த உத்திரவுக்குப் பணிந்து தொழிலாளர்களை திரும்பவும் வேலைக்கு வைத்துக்கொள்ள சம்மதிப்பதில்லை. அதற்குப் பிறகு அப்பீல் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால் ஒன்றும் கிடையாது. சிவில் கோர்ட்டுக்குப் போகவேண்டும். அதன் முடிவு எப்படியிருக்குமென்று சொல்வதற்கில்லை. அப்படியிருக்கும்பொழுது இருக்கின்ற சட்டத்திற்கே ஏன் விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்கிறேன். இதனல் இனி தொழிற்சங்கங்களை அமைத்துக்கொள்வதுகூட முடியாது. இதனுல் இப்பொழுதே பல கடை சிப்பந்திகள், குமாஸ்தாக்கள் முதலியோர் மிகுந்த கஷ்டத்தை மறுபடியும் அனுபவிக்க நேரிட்டிருக்கிறது. ஆகவே இந்த விதிவிலக்கை உடனடியாக ரத்து செய்துவிடவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.''

* **Sri K. T. RAJU** :—"கனம் சபாநாயகர் அவர்களே, கடை சிப்பந்திகள் மூன்றுபேர், அல்லது மூன்றுபேர்களுக்குக் குறைவாயுள்ள கடைகளுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்திருக்கிருர்கள். இந்த வருஷம் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தால் அதற்குப் பிறகு ஒவ்வொரு வருஷமும் அந்தச் சட்டத்திலிருந்து முன்னேறிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக நாம் ரொம்பப் பின்னுக்குப் போய்க்கொண்டிருக்கிருேம் என்றே நினைக்கிறேன். அதுவும் இந்த விதிவிலக்கை அளிப்பதன்மூலம் நாம் 1947-ம் வருஷத்திற்கும் பின்னுல் போயிருக்கிருேம்.

"ஆகவேதான் ஆயிரக்கணக்கான கடை சிப்பந்திகள், கடை குமாஸ்தாக்களின் பேரிலுள்ள மனித அபிமானத்தின் பேரால் நான் கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றையதினம் ஒவ்வொரு நாளும் எத்தனையோ இடங்களில் மகாநாடுகள் நடக்கின்றன. பொருட்காட்சிகள் நடக்கின்றன. சினிமாக்கள், இதர பொழுதுபோக்குக் கேளிக்கைகள் நடக்கின்றன. சின்னக் கடையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களும் மனிதர்கள் தானே. அவர்களும் வாரத்திற்கு ஒரு நாள் அங்கு, இங்கு எங்காவது போய் கொஞ்சநேரம் அமைதியாக, இன்பமாகப் பொழுதைக் கழித்துவிட்டு வரலாம் என்ற எண்ணம் தோன்ருதா, அட, அதுவே வேண்டாம். கனம் மந்திரி அவர்களே அவர்களது ஊருக்குப் போகிருர்கள், அங்கே ஒரு கூட்டத்தில் பேசுகிருர்கள் என்று வைத்துக்கொண்டால் நம்ம ராஜ்ய மந்திரி என்னதான் சொல்லுகிருர்கள் என்று கேட்போமென்ற ஆசை அவர்களுக்கு இருக்காதா ? அப்படி ஆசை உண்டானுல் ஒரு நாள் ஒய்வு எடுத்துக்கொள்ளலாமென்ருல் இப்பொழுது இந்த விதிவிலக்கின் மூலமாக எப்படி முடியுமென்று நான் கேட்கிறேன். ஆவடி காங்கிரஸ் மகாநாடு நடந்ததே, அதற்குப் போகவேண்டுமென்று விரும்பியிருந்தாலும் ஒரு நாள் ஒய்வாவது அவனுக்கு வேண்டாமா ? அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் மனிதர்கள் தானே. இயந்திரங்களுக்குக்கூட ஒய்வு வேண்டியது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. பஞ்சாலையை எடுத்துக் கொண்டாலும் ஒய்வு கொடுக்க வேண்டியிருக்கிறது. ரயில் எஞ்ஜினைத்தான் எடுத்துக்கொள்ளுங்கள்; 48 மணி நேரம் சேர்ந்தாற்போல் ஓடினுல் உடனே அதற்கு ரெஸ்டு கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படியிருக்கும்போது, சோஷலிஸத்தன்மை வாய்ந்த சமுதாயத்தை அமைக்கப்போகிருேம் என்று சொல்லிக்கொண்டிருக்கிற இந்தச் சர்க்கார், தொழிலாளர்களுடைய க்ஷேமநலனில் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகச்சொல்லிக்கொண்டிருக்கும் இந்தச் சர்க்கார் இந்த விதிவிலக்கை அளிப்பதன் மூலம் 1947-ம் வருஷத்திலிருந்து தொழிலாளர்கள் அனுபவித்து வருகின்ற சிற்சில வசதிகளையும் இனிமேல் அனுபவிக்க முடியாமல் செய்துவிட்டார்கள். இது ரொம்ப வருந்த வேண்டிய விஷயம். ஆகவே மனித அபிமானத்தின் பேரால் நான் சர்க்காரை ரொம்பத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"இந்த நாட்டிலே ஆயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளர்கள் இருக்கிருர்கள். அவர்கள் அப்பாவிகள். தங்கள் உரிமையைப் பெற எப்படி கிளர்ச்சி செய்வது என்பது இன்னதென்றுகூடத் தெரியாதவர்கள். அவர்கள் எல்லோரும் சர்க்கார் கொண்டு வந்திருந்த இந்தச் சட்டத்தில்

ஏதோ வாரத்தில் 6 நாட்கள் தான் ஓயாமல் வேலை செய்தாலும்கூட ஒரு நாளாவது வீட்டு வேலையை கவனித்துக்கொண்டு வந்தார்கள். அதற்கும் இனி இடமில்லாத வகையில் இந்த விதிவிலக்கைக் கொண்டு வந்துவிட்டீர்களே இது நியாயமா ? தலையைத்தான் வலித்தது, உடம்பைத்தான் வலித்தது ஓய்வு எடுத்துக்கொள்வோம் என்று ஒரு நாள்கூட இனி லீவு போடமுடியாத நிலைமையை உண்டுபண்ணிவிட்டீர்களே இது தர்மமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

“ இந்த விதிவிலக்கை பரீட்சார்த்தமாக ஒரு வருஷத்திற்கே கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே அதுகூட ரொம்ப நல்லது. நமக்கு இதுவரையில் ஏற்பட்டிருக்கிற அனுபவத்தைக்கொண்டு பார்த்தாலே ஏராளமான தொழிலாளர்கள் இந்த விதிவிலக்கினால் பலியிடப்பட்டிருக்கிறார்கள் என்பது நன்கு தெரியும். ஆகவே மனித அபிமானத்தின் பேரால் கேட்டுக்கொள்ளுகிறேன். உங்களுடைய பரீட்சை போதும். உடனடியாக இந்த விதிவிலக்கை ரத்துசெய்து விடுங்கள். இல்லாதபட்சத்தில் இது விஷப்பரீட்சையாகவே முடிந்துவிடும் என்று சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கே நான்கு, அல்லது ஐந்து ஆட்களை வைத்துக்கொண்டிருந்த முதலாளிகள் எல்லாம் தங்கள் கடை ஆட்களை வியாபாரம் இல்லையென்று சொல்லிவேலையைவிட்டு நீக்கிவிட்டிருக்கிறார்கள். கடைக்காரனும் தங்கள் கடை ஆட்களை மூன்று பேராகக் குறைத்துக்கொண்டுவிட்டால் ஷாப் சட்டத்தினால் தங்களுக்கும் தொந்தரவு வராது என்கின்ற காரணமேதான். ஆகவே இனி பரீட்சார்த்தம் போதும். இனிமேலும் அந்த விதிவிலக்கை நீடித்துக்கொண்டிருக்கும்படி செய்தால் அது விஷப்பரீட்சையாக முடிந்துவிடும். இவ்விஷயத்தில் கட்சி மனப்பான்மைக்கே இடமில்லை. எதிர்க்கட்சி அங்கத்தினர் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே என்று தயங்கவேண்டியதில்லை. எல்லா அங்கத்தினர்களும் ஒருமுகமாக இதனை ஆதரித்து தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது அபிவிருத்தி வரி மாதிரியானது அல்ல. எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லும் யோசனையைக் கேட்டால் எங்கள் வருமானம் குறைந்து போகுமே என்று சர்க்கார் சொல்வதற்கு. இந்தத் தீர்மானத்தை ஒப்புக்கொண்டால் சாதாரண கடைகளில் வேலை செய்யும் கடை சிப்பந்திகள், கடை குமாஸ்தாக்கள் வாரத்திற்கு ஒரு நாள் லீவு வசதியை அனுபவிப்பார்கள். அவ்வளவுதான். கனம் மந்திரிக்குக்கூட சேர்ந்தாற்போல் நான்கு மணி நேரம் வேலை செய்தால் ஒரு மணி நேரம் ஓய்வு பெறவேண்டுமென்று தோன்றவில்லையா ? அதைப்போல அந்தக் கடை சிப்பந்திகளும் மனிதர்கள் தானே. மனித அபிமானத்தோடு பார்த்தால் வாரத்திற்கு 6 நாள் உழைத்தால் ஒரு நாள் ஓய்வு பெறவேண்டுமென்று அவர்கள் விரும்புவது தப்பா ? ஆகவே இரண்டு பேர்கள் இருந்தாலும், மூன்று பேர்கள் இருந்தாலும் எல்லாக் கடைகளுக்கும் இந்தச் சட்டம் பொருந்துமென்று சொல்ல வேண்டும். விதிவிலக்கு நிச்சயமாக அளிக்கக்கூடாதென்று கேட்டுக்கொண்டு, கனம் மந்திரி அவர்கள் ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் அவர்கள் கொடுத்திருக்கும் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.”

5-31 p.m. * **SRI A. GOVINDASWAMY NAYAGAR** :—“ கனம் சபாநாயகர் அவர்களே, கடை சிப்பந்திகள் விஷயத்தில் கனம் மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் கருணைகூர்ந்து கண்டிப்பாக இந்த விதிவிலக்கை நீக்குவார் என்ற நம்பிக்கையோடு சகல கட்சி அங்கத்தினர்களும் பேசிவருகிறார்கள். இந்த விதிவிலக்கினால் தொழிலாளர்களெல்லாம் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக எங்களுடைய ஜில்லாவிலிருக்கக்கூடிய கடை சிப்பந்திகள் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய உரிமை பறிபோயிருக்கிறது. சுதந்திர சர்க்கார் நடக்கின்ற இக்காலத்தில் தொழிலாளர்களுடைய சுதந்திரத்தைப் பறிக்கக்கூடிய அளவுக்கு சுதந்திரம் வளர்ந்து வருகிறது.

“ சோஷலிசத் தன்மை வாய்ந்த சமுதாயம் உருவாக்கப்படவேண்டுமென்ற மனப்போக்கு சர்க்காருக்குப் பெயரளவில் இருக்கிறதேயொழிய உண்மையாகவே அந்த நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால்

முதலாளிகளுக்கு உதவக்கூடிய முறையி முதலாளிகளுக்கு உடந்தையாக இந்த விதிவிலக்கை அளித்துவருகிறார்கள். வேலை ஆட்களைக் குறைப்பதோடுமட்டுமல்லாமல் சம்பளத்தையும் குறைத்துக்கொண்டுவருகிறார்கள். நிர்ப்பந்தத்தின் காரணமாக, தொழிலாளர்களுக்கு ஏதோ கிடைத்தது கிடைக்கட்டும் என்று பல கஷ்டங்களை அனுபவித்து வேலை செய்து வருகிறார்கள். நண்பர் ஸ்ரீ கே. டி. ராஜு அவர்கள் சொன்னதுபோல ஓய்வு எல்லோருக்கும் தேவை. இயந்திரங்களுக்கும்கூட ஓய்வு தேவையாக இருக்கும்போது மனிதர்களுக்கும் ஓய்வு அவசியமாக இருக்கிறது. மந்திரி அவர்களும் நீண்ட நேரம் வேலை செய்ய முடியாது. குறிப்பாக இரண்டு, மூன்று மணி நேரம் அமைதியாக இந்தச் சபையில் இருந்து, நாங்கள் சொல்வதைக் கேட்கிறதற்கே மந்திரிகளுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அதனால்தான் மந்திரிகள் அடிக்கடி தங்கள் இடத்தில் இல்லாமல் வெளியே போய்வர வேண்டிய சங்கடம் ஏற்படுகிறது. அந்தமாதிரி ஓய்வு மந்திரி அவர்களுக்குத் தேவைப்படுவதுபோல் தொழிலாளர்களுக்கும் தேவைப்படுகிறது. எனென்றால், கடையில் சாமான்கள் வாங்க வருபவர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் கோபப்படாமல் பதில் சொல்லியாகவேண்டியிருக்கிறது. முதலாளிகளுடைய திட்டுதல்களையும் கடைச் சிப்பந்திகள் சகித்துக்கொண்டு அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சாதாரண ஏழைத் தொழிலாளர்களுக்கு ஓய்வு கிடைக்கவேண்டியது அவசியம். அப்படிப்பட்டவர்களுக்கு வேலைக்குத் தகுந்த ஊதியமும், ஓய்வும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் க்ஷேமநல சர்க்கார் இருக்க வேண்டுமேயொழிய முதலாளிகளைப் பாதுகாப்பதற்காக மட்டும் இருக்கக்கூடாது. தேர்தல் சமயத்தில் முதலாளிகள் ஏதோ தங்களுக்குச் சாதகமாக இருப்பார்கள் என்று நினைத்து கடைச் சிப்பந்திகளுடைய நலனைக் கவனிக்காமல் இருப்பார்களானால், தேர்தல் சமயத்தில் நிச்சயமாகத் தொழிலாளர்கள் சர்க்கார் கட்சியைக் காலை வாரிவிடக்கூடும். ஆகவே, தொழிலாளர்களுடைய வயிற்றெறிச்சலை கொட்டிக்கொள்ளவேண்டாம் என்று அனுபவம் உள்ள கனம் தொழில் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தை சர்க்கார் போட்டுக்கொண்டுவருகிறார்கள். இந்த விதி விலக்கின் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் அதிகரிக்க நேரிடும். இரண்டாவது ஐந்து வருஷத் திட்டம் போட்டாலும், இன்னும் எத்தனை ஐந்து வருஷத் திட்டங்கள் போட்டாலும் இதேமுறையில் தொழிலாளர்களின் நலன் புறக்கணிக்கப்படுமானால் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை சர்க்கார் தீர்க்கவேமுடியாது. வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையைத் தீர்க்க சர்க்கார் எத்தனை ஐந்து வருஷத் திட்டத்தைப் போடப்போகிறார்களோ அது பொறுத்திருந்து பார்க்கவேண்டிய விஷயம். ஆகவே, தயவுசெய்து இந்த விதிவிலக்கை ரத்து செய்துவிடுவதுதான் நல்லது என்று மந்திரி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பொழுதுதான் கடை சிப்பந்திகள் போன்ற தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படும். கனம் மந்திரி அவர்கள் கடைச் சிப்பந்திகள் சட்டத்திற்குச் செய்திருக்கும் விதிவிலக்கை ரத்துசெய்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது, அப்படியே அவர் செய்யவேண்டுமென்றும் நான் அவரைக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்."

* SRI K. P. GOPALAN :—" Mr. Speaker, this Government Order, as I understand it, is the outcome of the labour policy of the Government. We have seen what attitude was taken by the Central Government and the bankers regarding the Bank award and how the Government have evolved a policy to the detriment of the Bank employees. The same sort of policy is reflected here also. The commercial workers have, after a prolonged struggle, got this Bill passed by the Assembly. Though there are some defects in this Act, there are so many advantages conferred on the workers by

[Sri K. P. Gopalan] [14th February 1955

this law. One is the fixation of 8-hour working day, another is the grant of a weekly holiday with pay and the third is the grant of overtime pay for overtime work. One important thing was mentioned by the hon. Member Sri Pakkiriswami Pillay. That is this. If an employee, on dismissal, files a complaint before the Labour Commissioner under section 41 of the Act, the Labour Commissioner can give an award which will be binding on the employer. That right is also now taken away. Then, the workers will get 12 days' privilege leave, 12 days' casual leave and 12 days' sick leave. So far as my experience about the implementation of this Act goes, it is applicable only to municipalities and major panchayats. Even in that case many shop-keepers and workers do not know that there is an Act like this. The Government have also not appointed sufficient personnel to examine how the Act is being worked in our State. I have seen that a commercial employee goes to a firm or a shop at 7 o'clock in the morning and works till 8 or 10 p.m. Where is the guarantee regarding security of service for him in the firm? Where is the machinery to guarantee the minimum hours of work for him? The Government have now taken away the rights of the workers. Before passing this order, the Government should have consulted the Commercial Employees' Union and as recommended by the Special Officer, Sri B. V. Subramaniam, they should have consulted this Assembly. But they have not done that. There are thousands of commercial employees in our State who are now leading a miserable life. Even though the Government may argue otherwise, this Act is applied only to municipalities and major panchayats. Even now there are branches of beedi factories in several places. The workers in those factories can be brought within the purview of this Act. Therefore, the Government should withdraw this order. Otherwise, pleading for socialism and for the establishment of a better society and a Welfare State will carry no meaning. It will be only adding insult to injury. I hope the Hon. the Labour Minister will view this in a sympathetic manner. The commercial workers have got this Act passed after a prolonged struggle, as I have already said. I am sure that they will see that their rights are not taken away either by the Government or by the employers. I request the Government to consider this matter in a sympathetic manner and repeal the Government Order as soon as possible. Words are not needed now, but action is needed.''

5-42 p.m. **Sri K. R. Sambandam** :—'' கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஷாப் ஆக்டில் விதிவிலக்கு ஏற்படுத்தாததின் காரணமாக இன்றைக்கு பல ஆயிரக்கணக்கான மக்கள் கஷ்டப்படவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஏற்கெனவே இதுபோல் தஞ்சாவூர் விவசாய பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு எக்செம்ஷன் கொடுத்த காரணத்தினால் அங்கு வேலை செய்யும் விவசாயிகளுக்கு சட்டத்தில் பாதுகாப்பு இருக்கிறது. இரண்டு மூன்று பேர்கள் இருக்கக்கூடிய கடைகளில் ஒரு விதமான பாதுகாப்பு இருப்பதாகத் தெரியவில்லை. இதனால் பல சிறு தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை உடனடியாகத் தீர்மானிக்காவிட்டால் எந்த அளவுக்கு நாம் சட்டங்கள் வகுத்த போதிலும் பிரயோஜனம் இல்லை. பணத்தை

வைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருப்பவர்கள் ஏதோ இரண்டு பேரை வைத்துக்கொண்டு சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுகிறார்கள். ஆகையால் ஏற்கெனவே இருந்துவரும் சட்டத்தில் ஒரு விதிவிலக்கு அளிப்பது அவசியம், நியாயம். இந்தவிதமான நிர்ப்பந்தம் ஏற்பட்டால்தான் 5, 6 பேர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும், இந்தச் சட்டத்தின் பிரகாரம் பல முதலாளிகள் வரியைக் கொடுக்காமல் தப்பித்துக்கொள்ளலாம். இந்த மாதிரியாக இவர்கள் நடப்பதால்தான் நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் இருந்துக்கொண்டு வருகிறது. அவர்கள் தங்களின் ஆட்களுக்கு கொடுக்கும் சம்பளமோ மிகமிகக் குறைவு. சரியான சம்பளத்தை நிர்ணயம் செய்வதில்லை, அவர்களுக்கு விடுமுறை கிடையாது. இது போன்ற அநீதிகளை இந்தச் சின்னக்கடைக்காரர்கள் இழைத்து வருகிறார்கள். ஆதலால்தான் அவர்களின் வேலை நேரத்தின் நிர்ணயமும், நியாயமான சம்பளமும், விடுமுறை அளிப்பது முதலிய பாதுகாப்பும் ஏற்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி அவர்களுக்கு நன்மையைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.''

Presentation of petitions to the Assembly.

SRI M. KALYANASUNDARAM :—'' Sir, I have got some petitions. May I present them now? ''

MR. SPEAKER :—'' The hon. Member may give them to the Secretary.''

(Sri Kalyanasundaram then presnted the petitions to the Joint Secretary to the Legislature.)

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM** :—'' இந்த விவாதத்தை நான் வரவேற்கிறேன். இதை அனுமதித்த தங்களுக்கும் நான் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். ஏனெனில், 1947-ம் வருஷத்திய ஷாப் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்ட் சட்டத்திலிருந்து விலக்கு அளிப்பது என அரசாங்கம் எடுத்த முடிவைப்பற்றி பல குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டு வருவதை நானும் அறிந்திருக்கிறேன். அதுமட்டுமல்ல. எதிர்க்கட்சி உதவி தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, எனக்குக்கூட பல தந்திகள் வந்திருக்கின்றன. அதாவது, 1947-ம் வருஷத்தில் மெட்ராஸ் ஷாப் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்ட் சட்டத்திலிருந்து விதிவிலக்கு செய்யக்கூடாதென்று கடை குமாஸ்தாக்களும் மற்ற தொழிலாளர்கள் பலரும் எனக்குப் பல தந்திகள் அனுப்பியிருக்கிறார்கள். எனினும், அரசாங்கம் அந்த முடிவுக்கு ஏன் வந்தது என்பதை அவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் விளக்குவதற்கு இந்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டதை நான் வரவேற்கிறேன். 5-44 p.m.

'' அரசாங்கம் அந்த முடிவுக்கு வந்ததிலிருந்து ஏதோ அரசாங்கத்தின் தொழில் கொள்கையே தவறுதலாகப் போய்விட்டது, அல்லது மாறி விட்டது, அல்லது ஏதோ தெரியாமல் 1947-ம் வருஷத்திலே அப்பொழுதிருந்த அரசாங்கம் அதைச் செய்துவிட்டது, இப்பொழுது அதிலிருந்து எப்படிப் பின் வாங்குவது என்று இந்த அரசாங்கத்தார் பார்க்கின்றார்கள் என்றெல்லாம் எதிர்க்கட்சியினர் சொல்லக்கூடிய தோரணையிலேயே குறைகள் சொல்லப்பட்டன. அதுவும் எதிர்க்கட்சி உதவித் தலைவர் பேசும்போது நெய்வேலி பற்றிய விஷயத்தை எடுத்துக்கொண்டார்கள். எந்த விவாதத்திலும் அதைப்பற்றி அவர் வழக்கமாகக் குறிப்பிடுவது போல் இதிலும் அவ்விஷயத்தைக் கொண்டுவந்தார்கள். அவருக்கு அதில் ஒரு பிரமை என்றுதான் சொல்லவேண்டும். அவர்களுக்குத்தான் அவ்விஷயத்தில் ரொம்பக் கோபம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லவேண்டும். ஏனென்றால் தங்கள் கட்சியின் பலத்திற்காக அவ்விஷயத்தை பயன்படுத்திக்கொள்ளலாம் என்று பார்த்து, அது முடியாமற்போகவே அதனால் அவருக்குத்தான் கோபம் ஏற்பட்டிருக்கலாம். எனக்கு என்ன கோபம் ? அதில் எனக்கு வருத்தந்தான், கோபமில்லை.

" ஏனென்றால் இந்த நாட்டுக்கும் இந்த நாட்டிலுள்ள மக்களுக்கும் பெரிய அளவில் உதவக்கூடியதும், அவர்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்தக்கூடியதுமான இம்மகத்தான நெய்வேலி திட்டத்தை சர்க்கார் நிறைவேற்றும்போது ஒரு சிலர் அதை **sabotage** செய்யப்பார்க்கிறார்களே, அதுவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, பொறுப்புள்ள அங்கத்தினர்களே அந்த நாச வேலைக்குத் தெரிந்தோ, தெரியாமலோ ஆதரவு அளிக்கிறார்களே என்பதை நினைக்க நான் வருத்தப்படுகிறேன். அந்த வருத்தத்துடன்தான் நான் அன்று பேசினேனே தவிர கோபத்தோடு ஒன்றும் பேசவில்லை.

" இப்பொழுது இந்த ஷாப் அண்டு எஸ்டாபிளிஷ்மென்ட் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்திருப்பதைப்பற்றி கனம் எதிர்க்கட்சி உதவித் தலைவர் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டத்தின் 6-வது ஷரத்திலே அரசாங்கத்திற்கு இந்தச் சட்டத்தின் விதிகளிலிருந்து விலக்கு அளிப்பதற்கு ஏற்கெனவேயே உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரி அரசாங்கத்திற்கு விதிவிலக்கு அளிக்கக்கூடிய ஷரத்து அந்தச் சட்டத்தில் போடப்பட்டிருக்கிறதென்பதற்காக இப்பொழுது நாங்கள் விதிவிலக்கு அளித்திருக்கிறோம் என்று சொல்லவில்லை.

" கடைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள், குமாஸ்தாக்கள் ஆகிய எல்லோரும் இந்தச் சட்டத்தைப் பெரிதும் வரவேற்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இந்தச் சட்டத்தினால் பலன் அடைகிறார்கள், பலன் அடைய நினைக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். அவர்கள் பேரில் என்னைப் பொறுத்தவரையில் அனுதாபம் இல்லாமலில்லை.

" ஆனால், இந்தச் சட்டம் அமுலிலுள்ள பிரதேசங்களில் இருக்கின்ற, மேஜர் பஞ்சாயத்துக்களாக இருந்தாலும் அவற்றிலுள்ள கிராமங்களில் இருக்கின்ற சிறிய கடைகள் வைத்திருப்பவர்களை நாம் பெரிய முதலாளிகளெனக் கருதமுடியாது. அவர்களும் அனுதாபத்திற்குரியவர்கள் என்று பலர் உணர்வார்கள். அபிப்பிராயமும் அதுதான். சிறிய கடைகளை, வெற்றிலைப் பாக்கு கடை, சோடா கடை போன்றவைகளைவைத்து நடத்துகின்றவர்களைப் பெரிய முதலாளிகளாக பாவிக்கமுடியாது."

Sri M. KALYANASUNDARAM :—" சிறிய கடைகளை வைத்து தாங்களே நடத்தக்கூடியவர்களை இந்தச் சட்டம் பாதிக்காது என்பது மந்திரி அவர்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். ஆகவே, சிறிய கடைக்காரர்களைக் காட்டி அவர்கள் பேரில் அனுதாபம் கொண்டு இந்த விதிவிலக்கை அளித்திருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சமாதானம் சொல்ல வேண்டாமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

***The Hon. Sri M. BHAKTAVATSALAM** :—"அது எனக்குத் தெரியாமல் இல்லை. மூன்று பேர்களுக்கு மேல் ஆட்களைப் போட்டு நடத்த முடியாதிருக்கின்ற கடைகளையும்கூட நாம் பெரிய கடைகளாகக் கருத முடியாது. அந்தக் கடைகளை வைத்து நடத்துகின்றவர்களையும் நாம் பெரிய முதலாளிகளாகக் கருதக்கூடாது. தொழிலாளிகளிடம் நமக்கு அனுதாபம் இருப்பதைப்போலவே, அவ்வளவு அனுதாபம் சிறிய கடைகளை வைத்து நடத்துகின்றவர்களிடம் இல்லாவிட்டாலும், ஏறக்குறைய அதில் கொஞ்சம் அனுதாபமாவது அவர்களிடம் நமக்கு இருக்கவேண்டும். அந்தச் சிறிய கடைக்காரர்கள் செய்வதும் ஒரு பெரிய சேவை. ஏனென்றால், அந்தந்த கிராமத்திலுள்ள மக்களின் தேவைக்கு வேண்டிய சாமான்களை அவர்கள் அக்கறையோடு அந்த கிராமத்திலுள்ள மக்களுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, மக்களுக்கு வேண்டிய சாமான்களைக் கொடுத்து வருகின்ற இந்தச் சிறிய கடைகளும்கூட பெருகவேண்டும் என்பது என்னுடைய அவா. அதுவே அரசாங்கத்தின் அவாவும். இம்மாதிரி சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து இந்தச் சிறிய கடைகள் அதிகம் பெருக முடியாது போய்விட்டது என்பது எங்களுக்குத் தெரிந்த தகவலிலிருந்து அறிந்தோம். சிறிய கடைகள் கிராமங்களில் அதிகம் பெருகினால்தான்

மக்களுக்கு, குறிப்பாக ஏழை ஜனங்களுக்கு அதிக உபயோகமாக இருக்கும். ஆனால், சிறிய கடைகளே அதிகம் பெருகவில்லை. ஆகவே, ஒரு பக்கத்தில் இப்படிப்பட்ட சிறிய கடைகள் பெருகவேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்திலிருந்து ஏதாவது விதிவிலக்கு செய்யலாமா என்ற யோசனை அரசாங்கத்திற்கு இருந்துவந்தது.

"மற்றும் எதிர்க்கட்சி உதவித் தலைவர் சொன்னதுபோல் அல்லது வேறு ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் போதுமான உத்தியோகஸ்தர்கள் இல்லாததால் சரியானபடி இந்தச் சட்டம் அமுல் செய்யப்படவில்லை என்ற புகார்களும் வந்தன என்று சொன்னார்கள். அது உண்மை. எல்லாக் கடைகளையும் மேற்பார்வை செய்வதற்குப் போதுமான உத்தியோகஸ்தர்களை நியமிப்பதென்றால் அரசாங்கத்திற்கு ஏராளமாகப் பணம் செலவாகும். போதிய உத்தியோகஸ்தர்கள் இல்லையென்றாலும் இந்தச் சட்டம் சரிவர அமுல் செய்ய முடிகிறதா என கவனிக்க முடியாமல் போகிறது. அதோடு மற்ற துறைகளில் சொல்லப்படுவதுபோல் இருக்கிற உத்தியோகஸ்தர்களைப்பற்றியே அனாவசியமாக அவர்கள் தொல்லை கொடுக்கிறார்கள் என்ற புகாரும் அரசாங்கத்திற்கு வருகிறது. அதிகாரிகளால் இந்தச் சிறிய கடைகளிலே தவறுதல் நடந்தது என்ற காரணத்திற்காக ஏராளமான பிராசிக்யூஷன்கள் போடப்பட்டன. அம்மாதிரியாக பிராசிக்யூஷன் போடப்பட்டதே தவிர அவைகள் விசாரணைக்கு வந்தபோது அவற்றை நல்ல முறையில் நடத்தி ருசிப்பிக்க முடியாததால் குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க முடியாமல் போய்விட்டது. அதனால் வழக்குகள் தள்ளப்பட்டன. ஆகவே இதையெல்லாம் வைத்துக் கொண்டுதான் பொதுவாக அந்தந்த பிராந்தியங்களிலுள்ள பொது மக்களுடைய அபிப்பிராயம் என்னவென்று தெரிந்துகொள்ளவேண்டுமென்று அரசாங்கம் முதல் வகுப்புப் பஞ்சாயத்துகளிடமும், முனிசிபாலிடிகளிடமும் அவர்களுடைய அபிப்பிராயங்களை தெரிவிக்கும்படி சர்க்கார் கேட்டார்கள். இதற்கு 44 முனிசிபாலிடிகளும், 69 முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்களும், "இம்மாதிரி விதிவிலக்குக் கொடுப்பது சரி" என்று ஆதரித்து அபிப்பிராயம் தெரிவித்தார்கள். ஆறு முனிசிபாலிடிகளும், 19 முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்களுமே 'இது வேண்டாம்' என்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள். மற்றவர்கள் சர்க்கார் புரிந்துக்கொள்ளக்கூடிய வகையில் எந்தவிதமான அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை. ஆகவே, பெரும்பாலானவர்களுடைய அபிப்பிராயத்தினபேரில்தான் இந்த 'நோட்டிபிகேஷன்' பிரகடனம் செய்யப்பட்டது.

"இம்மாதிரி விதிவிலக்கு அளித்திருப்பதை வைத்துக்கொண்டு ஒரு சிலர் தவறு செய்யலாம். அந்தச் சலுகையை துஷ்பிரயோகம் செய்யலாம். ஆகவே அதைத் தடுப்பதற்காகவே சில பிரத்யேக ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது, அதிகாரிகளை ஏமாற்றுவதற்கு இடமில்லாமல் அந்தச் சிறிய கடைக்காரர்களும்கூட 'விசிட் புத்தகம்' என்ற ஒரு புஸ்தகம் வைத்துக்கொள்ளவேண்டும். அதை அப்போதைக்கப்போது இன்ஸ்பெக்டர்கள் போய்ப்பார்ப்பார்கள். கடையில் ஏதாவது தவறு நடந்திருந்தால் அதற்கான நடவடிக்கைகளும் அந்தக் கடைக்காரர்கள் மேல் எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற ஒரு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது." 5-50 p.m.

SRI M. KALYANASUNDARAM :—"கடையில் ஐந்து பேர்கள் வேலை செய்கிறார்களா அல்லது மூன்று பேர்கள் வேலை செய்கிறார்களா என்பதை தெரிந்துகொள்வதற்குத்தான் அந்தப் புஸ்தகம் இருக்கிறது."

*THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"மேலும் இந்த விதிவிலக்கு ஒரு வருஷத்திற்குத்தான் அமுலில் இருக்கும். அந்த ஒரு வருஷத்தில் ஏற்படுகின்ற அனுபவத்தைக்கொண்டு, இந்த விதிவிலக்கு இருக்கவேண்டியது அவசியமா இல்லையா என்பதை நிரந்தரமாக முடிவு செய்யலாம் என்பதே அரசாங்கத்தின் எண்ணம். ஆகவே விலக்கை ஒரு வருஷத்திற்குத்தான் பிரயோகித்திருக்கின்றோம். இந்த ஷாப் அசிஸ்டெண்ட் சட்டத்திலே பல வகைகளில் குறைகள் கூறப்படுகின்றன."

[14th February 1955

Sri N. K. PALANISAMY :—"இந்த ஷாப் எஸ்டாபிளிஷ்மெண்ட் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்திருப்பதற்கு முக்கிய காரணத்தை கனம் மந்திரி அவர்கள் சொல்லவில்லை. இந்தச் சட்டம் அமுலில் இருப்பதினால் சிறிய கடைகளுக்குள்ள வியாபாரம் குறைவதாகவும் அதனால் சர்க்காருக்கு வருகின்ற வருமானம் குறைந்து போகின்றது என்ற காரணத்திற்காகவும்தான் கடைகளில் வேலை செய்கின்ற தொழிலாளிகளும், குமாஸ்தாக்களும் பலியிடப்பட்டிருக்கிறார்கள். சென்ற தீபாவளிக்கு முன்பாக ஒரு சிலர் இதுபற்றி கனம் மந்திரியிடம் தூது வந்ததும் அவர்களுக்காக வேண்டி இந்தச் சட்டத்திலிருந்து உடனடியாக சர்க்கார் விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள் என்பதும் உண்மையில்லையா ? கனம் மந்திரி அவர்கள் விதிவிலக்கு அளித்திருப்பதற்கான உண்மையான காரணங்களைச் சொல்ல வேண்டுமென்றும் மறைத்துப் பேசுவதில் பிரயோஜனமில்லையென்றும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

* **The Hon. Sri M. BHAKTAVATSALAM** :—"நான் சொல்வதெல்லாம் உண்மையான காரணங்கள்தான். எனக்குத் தோன்றுகிற காரணங்களைத் தான் சொல்கிறேன் .கனம் அங்கத்தினர், விசேஷமாக ஒன்றும் பேசிவிடவில்லை, அதைக் குறிப்பிட்டு நான் பதில் சொல்வதற்கு.

"நான் ஏற்கெனவே இந்த விதிவிலக்கு ஒரு வருஷத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னேன். அந்த ஷாப் சட்டத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்தக் குற்றங் குறைகளையெல்லாம் ஆராய்ந்து அதைத் திருத்த ஒரு மசோதாவைக்கொண்டு வந்து அதை நிறைவேற்ற எதிர்க்கட்சி உதவித் தலைவர் முற்பட்டிருக்கிறார். மத்திய அரசாங்கமும் இந்தச் சட்டத்தை தாங்களாகவே ஒரு மத்திய சட்டமாகச் செய்யப்போவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை எப்பொழுது செய்யப்போகிறார்களோ தெரியாது. இருந்தாலும் மத்திய அரசாங்கமே அந்தச் சட்டத்தை கொண்டுவருகிறதா என்று பார்க்கலாம் என்றுதான் நமது அரசாங்கம் இதுவரையில் ஒரு திருத்தமும் அந்தச் சட்டத்திற்குக் கொண்டு வராமலிருக்கிறது. ஆனால், சிறிய கடைகளை வைத்துக்கொண்டிருக்கின்றவர்கள் இந்த விலக்கில்லாமல் தங்களுடைய கடைகளை நடத்த முடியாது. அதனாலேயே அதிகமாக சிறிய கடைகள் பெருகவில்லை என்று சொன்னேன். சிறிய கடைகளின் எண்ணிக்கை பெருகவேண்டும் என்பதில் சர்க்காரும் அதிக ஆவலுள்ளவர்களாக இருப்பதால் இந்த விதிவிலக்கை அளித்தார்கள். ஆனால் ஒரு வருஷத்திற்குப் பிறகு இதைப் புனராலோசனை செய்யவேண்டுமென்றும், இந்த ஒரு வருஷத்தில் ஏற்படுகின்ற அனுபவத்தைக்கொண்டு இந்த விலக்கு வேண்டுமா வேண்டாமா என்று நிரந்தரமாக செய்யலாமென்றும் சர்க்கார் தீர்மானித்தது என்று நான் சொன்னேன். ஆனால், இந்த விதிவிலக்கினால் பல வகைகளில் தொழிலாளர்கள், குமாஸ்தாக்கள் ஆகியவர்களுக்கு ஏற்பட்டிருந்த வசதிகள் பறிக்கப்படுகின்றன என்று புகார்கள் கூறப்படுகின்றன. தொழிலாளர்களுடைய வசதிகள் பறிக்கப்படவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. ஆனால், சிறிய கடைகளை நடத்துகின்ற சிறிய வியாபாரிகளுக்கும் வசதி இருக்கவேண்டும், அப்பொழுதே சிறிய கடைகள் பெருகும் என்பதும் அரசாங்கத்தின் எண்ணம்.

"கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. பி. கோபாலன் அவர்கள் பேசும்போது சிற்சில வசதிகளைப்பற்றி குறிப்பிட்டார். அதைப்பற்றி நான் விவரித்துச் சொல்லவேண்டியதில்லை. இந்த நோட்டிபிகேஷன்படி டிசம்பர் மாதத்திலிருந்து ஒரு வருஷம் வரையில் இந்த விதிவிலக்கு அமுலில் இருக்கும் என்றாலும் அதற்குள்ளேயே சில வசதிகளையாவது மீண்டும் அந்தத் தொழிலாளர்களுக்கு அளிக்கலாமா என்று நான் பரிசீலனை செய்கிறேன். சில வசதிகளுக்கு இந்த விலக்கை எடுத்துவிட முடியுமா என்று பார்த்து எல்லோருக்கும் எது நலன் தருமோ அதுவும் குறிப்பாக, தொழிலாளர்களுக்கு எது நலன் தரக்கூடியதாகத் தோன்றுகிறதோ அதையும் பார்த்து நாங்கள் சட்டத்தையே திருத்தப் பார்க்கிறோம் என்று சொல்லி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்."

14th February 1955]

*SRI M. KALYANASUNDARAM :—" கனம் மந்திரி அவர்கள் நெய்வேலியைப்பற்றி நான் குறிப்பிட்டதைப்பற்றி சொன்னார். எங்களுடைய கட்சியைப் பலப்படுத்துவதற்கு நாங்கள் அங்கு முயற்சி செய்தோம், அது முடியவில்லை, அதற்காக எனக்கு கோபம் இருக்குமென்று சொன்னார். நான் கோபப்படவில்லை. அவர்கள் கோபப்பட்டு சொன்னபோதுகூட நான் பொறுமையுடன்தான் சபையில் இருந்திருக்கிறேன். எங்கள் கட்சி தோற்றுப்போனாலுங்கூட பரவாயில்லை. நெய்வேலித் திட்டம் நன்றாக உருவாகி, பலனளிக்கவேண்டும் என்பதே கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அபிப்பிராயம், என்னுடைய அபிப்பிராயமும்கூட என்பதை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

" அதோடு அங்கிருக்கக்கூடிய நிலைமையைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் கூறும்போது, யாரோ அவர்கள் செய்யும் நல்ல காரியங்களைச் சாபடேஜ் செய்வதாக குறிப்பிட்டார். அப்படிப்பட்ட நாச வேலைகளைச் செய்வது தொழிலாளர்கள் அல்ல. திட்டத்தை நல்லபடி நிறைவேற்றவேண்டுமென்றே தொழிலாளிகள் நினைக்கிறார்கள். நாச வேலையைச் செய்பவர்கள் அதிகாரிகள் தான். அதிகாரிகள் சொல்லியபடி தவறான விஷயங்களை கேட்டுக்கொண்டுதான் கனம் மந்திரி அவர்கள் கோபப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் என்னுடைய பேச்சு அன்றைக்கு அவருக்கு அப்பேர்ப்பட்ட கோபத்தை உண்டாக்கியிருக்கவே முடியாது. அவர் மனதில் ஏதோ சில காரணங்களை வைத்துக்கொண்டுதான் அப்படிக் கோபப்பட்டிருக்கிறார். அதற்கு அவசியமில்லை. இருந்தாலும், எங்கள் பேரில் வேண்டுமானாலும் அவர் தன்னுடைய கோபத்தைக் காட்டிக்கொள்ளட்டும், தொழிலாளர்கள் பேரில் கோபத்தைக் காட்டவேண்டாம் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

MR. SPEAKER :—" I adjourn the House till 11 a.m. to-morrow. "

The House then adjourned.

TRUTH ALONE TRIUMPHS
LIBRARY
17 MAR 1956
STATE LEGISLATURE, MADRAS

APPENDIX I.

[Vide answer to clause (c) of starred question No. 696 asked by Sri M S. Mogral at the meeting of the Legislative Assembly held on 14th February 1955, page 420 supra.]

Scheme sanctioned under the Local Development Works during 1953-54.

MALABAR DISTRICT.

Serial number and name of the scheme. (1)	*Estimated cost.* (2)	*Amount of contribution.* *From public.* (3)	*From local body.* (4)	*Amount of grant.* (5)
	RS.	RS.	RS.	RS.
Water-supply Scheme.				
1 Reconstruction of a well in R.S. No. 47/2, Vizhampur desam to Pudupaddi amsam, Kozhikode taluk.	2,000	500	500	1,000
2 Construction of a well at Thachampoyil in Kedavoor amsam, Kozhikode taluk.	2,500	625	625	1,250
3 Construction of a well at Parappuram in Pinarayi, Kottayam taluk.	2,500	625	625	1,250
4 Deepening of two wells in Malannur Bazaar, Kottayam taluk.	1,000	500	..	500
5 Construction of drinking water well on R.S. No. 122/1 of Kannul desam in Kottayam taluk.	2,500	1,250	..	1,250
Permanent works for improvement of Agriculture.				
6 Construction of a bund near Pakkayil area near sea coast at Badagara to prevent influx of salt water.	5,000	1,250	1,250	2,500
7 Construction of a dam at Chakkarakadav to protect cultivation in Kurumbranad.	1,000	500	..	500
8 Construction of a dam at Pannangad, Kurumbranad taluk,	1,500	875	375	750
9 Construction of a dam at Kuttivayil Thodu, Kurumbranad taluk.	1,500	750	..	750
10 Construction of a dam at Avala village for Gulikapazhe in Kurumbranad taluk.	2,000	1,000	..	1,000
11 Construction of a dam at Parapuzha at Vengarata Thodu in Cheruvannur amsam.	1,000	250	250	500
12 Construction of a channel to drain off water from Methikkayil punja lands to Canoly canal, Ponnai.	6,000	3,000	..	3,000
13 Construction of a bridge over Methikkayil channel in Ponnani.	1,500	375	375	750
14 Construction of a bund with sluice gate across Karetta stream in Kottayam taluk.	2,500	625	625	1,250
15 Construction of an anicut across Kottara Kandy Thodu in Eranjoly amsom in Kottayam taluk.	1,500	375	375	750
16 Repairing the tank in S. No. 51/3, of Pilachitra desam in Walluvanad taluk.	3,000	750	750	1,500

14th February 1955]

Serial number and name of the scheme. (1)	Estimated cost. (2)	Amount of contribution. From public. (3)	From local body. (4)	Amount of grant. (5)
	RS.	RS.	RS.	RS.
Improvement of rural sanitation.				
17 Construction of two septic tank latrines at Mottanoor bus-stand in Kottayam taluk.	1,000	250	250	500
18 Construction of two sptic tank latrines at Kuthuparamba in Kottayam taluk.	1,000	250	250	500
19 Constructicn of two septic tank latrines at Kidavoor in Kottayam taluk.	1,000	250	250	500
20 Construction of a septic tank latrine in Dharmadam in Kottayam taluk.	500	125	125	250
21 Construction of two septic tank latrines in Eranjoly, Kottayam taluk.	1,000	250	250	250
22 Construction of two septic tank latrines at Panoor, Kottayam taluk.	1,000	250	250	500
23 Construction of a septic tank latrine at Panayam in Kottayam taluk.	500	125	125	250
24 Construction of a septic tank latrine with six seats at Balapatam, Chirakkal taluk.	4,000	1,000	1,000	2,000
25 Construction of a septic tank latrine at Azhicode, Chirakkal taluk.	1,000	250	250	500
26 Improvements to the drain in Alwani Street, Kozhikode.	4,400	1,100	1,100	2,200
Village roads including small bridges and culverts.				
27 Improvements to Kunnathpalam bridge, Kozhikode.	10,000	5,000	..	5,000
28 Improvements to Kottuly road, Kozhikode.	3,000	1,500	..	1,500
29 Formation of a road from Pantheerankavu to Arapizhakadavu and Mankadavu, Kozhikode.	4,800	2,400	..	2,400
30 Formation of a road from Govindapuram to Puthyapalam and Kavilathazham, Kozhikode.	6,000	3,000	..	3,000
31 Improvements to the road from Kuthiravattam to Govindapuram.	1,500	750	..	750
32 Construction of a bridge on Beypore-Cheruvannur road, Kozhikode.	18,000	4,500	4,500	9,000
33 Development of Chathamangalam-Putbur road, Kozhikode.	6,000	3,000	..	3,000
34 Construction of five culverts on Irpora-Tachampoyil road, Kozhikode.	1,500	375	375	750
35 Development of Kurikathur to Kottamparamba road, Kozhikode.	2,000	1,000	..	1,000
36 Construction of a foot-bridge across Moothadath-Moozhilath Thodu, Kozhikode.	2,000	1,000	..	1,000
37 Construction of a foot-bridge on Mankavu-Cheruppa road.	2,000	1,000	..	1,000

[14th February 1955

Serial number and name of the scheme. (1)	Estimated cost. (2)	Amount of contribution. From public. (3)	From local body. (4)	Amount of grant. (5)
	RS.	RS.	RS.	RS.
Village roads including small bridges and culverts—cont.				
38 Construction of seven culverts on the Koduvalli-Kurungat Kadavu and Kuduvally market road, Kozhikode.	3,000	750	750	1,500
39 Formation of Kallanthodu-Kulimat road, Kozhikode.	6,000	3,000	..	3,000
40 Repairs to the abandoned road between Katameri and Chelakkad and construction of three culverts on the road, Kurumbranad.	7,500	3,750	..	3,750
41 Repairs to the road from Puduppanam to Nadukkuthazham road, Kurumbranad taluk.	1,500	375	375	750
42 Repairs to the road from Lakenavkavu to Theekuni in Badagara firka, Kurumbranad taluk.	3,500	1,000	750	1,750
43 Repairs to the existing footpath from Thodannur to Vilathapuram, Kurumbranad taluk.	5,000	1,250	1,250	2,500
44 Construction of a road to connect the footpath partly between Kuhingad, Vilathapuram and Purameri and thereto Irringannur, Kurumbranad taluk.	4,500	1,125	1,125	2,250
45 Conversion of the panchayat footpath connecting Purameri with Thooneri into a pucca road and construction of a new bridge at Karingalpalam, Kurumbranad taluk.	3,000	750	750	1,500
46 Repairs to the road from Kallachi to Kolangaraveedu-Kadavu, Kurumbranad taluk.	1,200	300	300	600
47 Repairs and metalling of the road from Karandoth to Theekuni Angadi in Cherapuram amsam, Kurumbranad taluk.	2,000	1,000	..	1,000
48 Repairs and construction of culvert to Talikara-Mokeri road, Kurumbranad taluk.	2,000	1,000	..	1,000
49 Repairs to Kumachirapalam in Edacheri amsam, Kurumbranad taluk.	1,500	375	375	750
50 Repairs to Quilandy-Kalpathur road, Kurumbranad taluk.	5,000	2,500	..	2,500
51 Development of the footpath from Vengappara Poyil to Nalliady Kadavu in Kurumbranad taluk.	5,000	2,500	..	2,500
52 Repairing and widening of the road from Meladi to Vanmukam via Pallikara, Kurumbranad taluk.	3,000	1,500	..	1,500
3 Construction of three culverts on the road from Kayanna to Perambra in Kurumbranad taluk.	2,000	1,000	..	1,000
54 Repairs to Ollur to Modakkallur road in Kurumbranad taluk.	2,000	1,000	..	1,000

Serial number and name of the scheme. (1)	Estimated cost. (2) RS.	Amount of contribution. From public. (3) RS.	From local body. (4) RS.	Amount of grant. (5) RS.
Village roads including small bridges and culverts—cont.				
55 Repairs to Vattoli-Kivaloor road, Kurumbranad taluk.	3,000	1,500	..	1,500
56 Repairs to Kallanode-Killikuduki road, Kurumbranad taluk.	1,000	500	..	500
57 Repairs to the road from Naduvannur to Balusseri in Kurumbranad taluk.	5,000	2,500	..	2,500
58 Construction of Pottanehira bridge in Kurumbranad taluk.	3,500	875	875	1,750
59 Repairs to Perambra-Chakkitappara road in Kurumbranad taluk.	2,500	1,250	..	1,250
60 Repairs to Meppayur-Cheravannur road in Kurumbranad taluk.	2,000	500	500	1,000
61 Repairs to Meppayur-Vilayathur road in Kurumbranad taluk.	1,500	375	375	750
62 Construction of a culvert at Pabri on Kuttiadi-Kadiyangad road in Kurumbranad taluk.	4,000	2,000	..	2,000
63 Construction of a footpath from Chenganat Kadavu to Perakam Panchayat Board in Ponnani taluk.	1,000	250	250	500
64 Improvements to the road from Chettuvoya-Ala road to Triprayar temple in Ponnani taluk.	3,000	1,500	..	1,500
65 Repairs to the bridge in Kakkathiri in Mala amsam, Ponnani taluk.	2,000	1,000	..	1,000
66 Construction of two culverts on Peringanur-Kotachira road in Ponnani taluk.	12,000	6,000	..	6,000
67 Construction of a culvert on Neelam Thodu in Ezhuvathiruthi in Ponnani taluk.	1,000	250	250	500
68 Construction of a foot bridge on footpath from Eswaramangalam to Pothanur in Ponnani taluk.	3,000	1,500	..	2,500
69 Construction of foot-bridge on footpath from Ponnani-Tirunavaya road to Tavanoor in Ponnani.	4,000	2,000	..	2,000
70 Construction of a bridge over Mallattupadam in Ponnani taluk.	1,500	750	..	750
71 Construction of a road from Ponnani-Palghat road (near mile stone 52/3) leading to the cremation ground, Ponnani taluk.	4,000	2,000	..	12,000
72 Construction of a road from Mahalan on the Ponnani T. B. road to Vairenellore tank road, Pallipuram desam in Ponnani taluk.	3,000	750	750	1,500
73 Reparing the road from the present Ponnani Panchayat limit to Pookaitha Kadavu.	1,500	750	..	750
74 Improvements to Guruvayur-Mummiyur road including the construction of a bridge near Mummiyur temple, Ponnani taluk.	20,000	5,000	5,000	10,000

Serial number and name of the scheme. (1)	Estimated cost. (2) RS.	Amount of contribution. From public. (3) RS.	From local body. (4) RS.	Amount of grant. (5) RS.
Village roads including small bridges and culverts—cont.				
75 Decking of two wooden bridges on the Panoor-Parakkadavu road in Kottayam taluk.	10,000	2,500	2,500	5,000
76 Construction of two wooden bridges at Vittoli-Tholambra road in Kottayam taluk.	10,000	2,500	2,500	5,000
77 Construction of culvert on Mokori road in Kottayam taluk.	500	125	125	250
78 Repairing the Kalpatta-Pinangode road up to Tariode river in Wynaad taluk.	20,000	5,000	5,000	10,000
79 Construction of Kottakkal-Cheppanangada village road in Ernad taluk.	20,000	10,000	..	10,000
80 Construction of Manjeri-Pookkottur village road in Ernad taluk.	20,000	10,000	..	10,000
81 Construction of a road from Olakkara to Cheleri in Velimukku amsam in Ernad taluk.	10,000	5,000	..	5,000
82 Construction of a road from Elanganoor to Pandikkad in Ernad taluk.	20,000	10,000	..	10,000
83 Construction of a cart-track from Vaniambalam to Kurulai via Amarambalan in Ernad taluk.	18,000	9,000	..	9,000
84 Construction of a foot-bridge across the canal between Valiprom and Chelampra amsam in Ernad taluk.	4,000	2,000	..	2,000
85 Construction of a road from Vazhikkadavu to Marutha Ambala Kadavu in Ernad taluk.	3,000	750	750	1,500
86 Construction of a road from Edakkara to Kathikallur in Ernad taluk.	5,000	1,250	1,250	2,500
87 Construction of a road from Kadambazhipuram passing through Mannampatta, Elumbulasseri, Karakurussi and Kariamba to the Palghat road in Walluvanad taluk.	15,000	7,500	..	7,500
88 Construction of a village road from Vellothukurusi to Panniankurussi in Cherupalachery amsam in Walluvanad taluk.	2,000	1,000	..	1,000
89 Construction of a bridge across Kakkathodu at Veeramangalam in Walluvanad taluk.	3,000	1,500	..	1,500
90 Construction of a road from Koppam to Payangattiri in Walluvanad taluk.	12,000	6,000	..	6,000
91 Construction of a road from Murukkampatta to Lakkidi in Walluvanad taluk.	6,000	3,000	..	3,000
92 Construction of a village road from Karkitankunnu to Edathanattukara in Walluvanad taluk.	6,000	3,000	..	3,000

14th February 1955]

Serial number and name of the scheme. (1)	*Estimated cost.* (2) RS.	*Amount of contribution.* *From public.* (3) RS.	*From local body.* (4) RS.	*Amount of cost.* (5) RS.
Village roads including small bridge and culverts—cont.				
93 Construction of road from Karivattam to Allanallur in Walluvanad taluk.	12,000	6,000	..	6,000
94 Construction of a bridge acioss Thodu in Mankada, Pallíprom amsam in Welluvanad taluk.	5,000	2,500	..	2,500
95 Construction of a village road from Angadipuram to Pariapuram, Walluvanad taluk.	4,000	2,000	..	2,000
96 Construction of a bridge across the channel in R.S. No. 36-7 of Chalat in Chirakkal taluk.	4,000	1,000	1,000	2,000
97 Construction of a bridge over the Kandamazhi channal in R.S. No. 593 of Azhikode in Chirakkal taluk.	5,000	1,250	1,250	2,500
98 Construction and repair of Chalat-Udayamkunnoor road in Puzhathi amsam in Chirakkal taluk.	12,000	3,000	3,000	6,000
99 Construction of a road from Kankole to Cheemeni in Chirakkal taluk.	10,000	2,500	2,500	5,000
100 Construction of a road from Timiri to Cherupuzha in Chirakkal taluk.	20,000	10,000	..	10,000
101 Construction of a road from mile 2/1 of Taliparamba-Irikkur road to mile 2/5 of Parechini-Muthappankavu road.	18,000	9,000	..	9,000
Improvements to school or dispensary buildings.				
102 Improvements to Chellanur Higher Elementary School in Kozhikode.	5,000	2,500	..	2,500
103 Improvements to Kunnamangalam High School.	10,000	5,000	..	5,000
104 Provision of additional accommodation to Nadapuram Local Fund Hospital, by constructing an additional ward, Kurumbranad taluk.	4,000	2,000	..	2,000
105 Providing additional accommodation to the labour ward of Local Fund Hospital, Quilandy in Kurumbranad taluk.	6,000	3,000	..	3,000
106 Construction of a building for Nattika Fisheries School, Ponnani taluk.	10,000	5,000	..	5,000
107 Construction of a building for Trithala High School, Trithala, Ponnani taluk.	20,000	10,000	..	10,000
108 Construction of one additional building for Vaniankulam High School, Walluvanad.	9,000	4,500	..	4,500
Construction of godowns by co-operative societies for storage of goods.				
109 Construction of a godown for Ponnani P.C.C. Society, Ponnani.	20,000	10,000	..	10,000
110 Construction of a godown for Trithala P.C.C. Society, Ponnani taluk.	20,000	10,000	..	10,000

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[14th February 1955

Serial number and name of the scheme.	Estimaied cost.	Amount of contribution. From public.	From local body.	Amount of grant.
(1)	(2)	(3)	(4)	(5)
	RS.	RS.	RS.	RS.
Construction of godowns by co-operative societies for storage of goods—cont.				
111 Construction of a godown for Kuriadi Fishermen's Co-operative Society, Badagara.	5,000	2,500	..	2,500
112 Construction of a godown for Co-operative Society for Fishermen at Blangod.	5,000	2,500	..	2,500
Other items of common utility.				
113 Construction of a building for library and reading room for the Kunnamangalam Gramodharana Sangam, Kozhikode.	1,200	600	..	600
114 Maternity Centre at Koduvally, Kozhikode taluk.	7,500	1,875	1,875	3,750
115 Opening of a library and reading room, Ponnani Panchayat area.	2,000	500	500	1,000
116 Construction of a dispensary at Vengara, Ernad taluk.	10,000	5,000	..	5,000
117 Construction of a building for Skippo Committee at Ottappalam.	10,000	5,000	..	5,000
Total ..	6,64,600	2,81,900	50,400	3,32,300

SOUTH KANARA DISTRICT.

Serial number and name of the scheme.	Estimaied cost.	From public.	From local body.	Amount of grant.
Construction of godowns for storage of goods.				
1 A godown for the Co-operative Society at Perdoor in Udipi taluk.	9,785	4,893	..	4,892
2 A godown for Co-operative Society at Kolathur in Kasargod taluk.	5,000	2,500	..	2,500
Village roads including small bridges and culverts.				
3 A foot-bridge in Anjar village of Udipi taluk.	3,000	1,500	..	1.500
4 A foot-bridge in Chervaka village of Puttur taluk.	3,738	1,869	..	1,869
5 A foot-bridge in Muttathody in Kasargod taluk.	4,900	2,450	..	2,450
6 A causeway across Edthad channel in Hosdrug taluk.	15,000	3,750	3,750	7,500
7 Pipe causeway at Bangarabettu in Udipi taluk.	20,000	5,000	5,000	10,000
8 Bridge on Kasargode-Seethangoly road in Kasargod taluk.	20,000	10,000	..	10,000
9 Road from Byndoor Hospital to sea-shore in Coondapur taluk.	3,350	837/8	837/8	1,675
10 Repair of road and construction of culvert at Koteshw r-Kodi road.	7,000	1,750	1,750	3,500
11 Road from Anagally to Barur in Coondapur taluk,	2,400	2,100	2,100	4,200
12 Road from Kalmadi to Kadavur in Udipi taluk.	10,500	5,250	..	5,250
13 Road from Manipal to Udayavar in Udipi taluk.	20,000	10,000	..	10,000

14th February 1955]

Serial number and name of the scheme. (1)	Estimated cost. (2)	Amount of contribution. From public. (3)	From local body. (4)	Amount of grant. (5)
	RS.	RS.	RS.	RS.
Village roads including small bridges and culverts—cont.				
4 14 Road from Nekraje to Karadka ..	14,000	7,000	..	7,000
15 Road from Thekkil to Kolathur ..	20,000	10,000	..	10,000
16 Road in Bommarabettu in Udipi taluk.	5,926	..	..	5,926
Improvement to school or dispensary buildings.				
17 Improvements to L.F. Hospital, Kadaba in Puttur taluk.	9,400	4,300	400	4,700
18 Improvements to Board Elementary School, Bilinale.	1,855	950	..	905
19 Improvement to Board High School, Panja in Puttur taluk.	10,000	5,000	..	5,000
20 Improvements to Adoor Elementary School in Kasargod taluk.	4,000	1,000	1,000	2,000
21 Improvements to Board Higher Elementary School, Hangarcutta in Udipi taluk.	11,800	2,950	2,950	5,900
22 Improvements to Board Elementary School, Kalavar in Coondapur.	13,300	3,325	3,325	6,650
Total ..	2,20,954	86,424/8	21,112/8	1,13,417

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

APPENDIX II.

[Vide answer to starred question No. 700 asked by Sri A. Ratnam at the meeting of the Legislative Assembly held on 14th February 1955, page 423 supra.]

I. Statement showing particulars of Veterinary dispensaries, First-aid centres and Artificial Insemination centres started in 1953–54 and expenditure incurred thereon.

(1)	*Number started in 1953–54.* (2)	*Expenditure incurred in 1953–54.* (3) RS. A. P.
Veterinary dispensaries including minor Veterinary dispensaries	1	4,554 0 0
First aid centres	63*	..
Artificial Insemination centres	2	36,113 7 0

II. Statement showing particulars of Veterinary dispensaries, First-aid centres and Artificial Insemination centres sanctioned and proposed to be opened in 1954–55.

(1)	*Number sanctioned or proposed to be started.* (2)	*Estimated expenditure in 1954–55.* (3) RS.	*Probable amount that may be spent.* (4) RS.
Veterinary dispensaries including minor Veterinary dispensaries.	17	1,02,000	1,02,000
First aid centres	9 *	*	*
Artificial Insemination centres ..	2	45,352	45,352
Artificial Insemination centres sanctioned under Tanjore National Extension Service Scheme.	2	53,200	53,200

* NOTE.—The first aid centres will be managed with the existing staff and equipment. Hence no expenditure will be involved in the opening of these centres.